
தேவதையின்
கொலுசு
ரூ.8/-
ஜூன் 2010
மாத நாவல்
வாசகர்களுக்கு
பரிசுப் போட்டி!
அறிவிப்பு உள்ளே..
சுபா
போனஸ்..
விறுவிறு
மொறுமொறு
மெகா
சிறுகதைகள்!
அனல் மேலே
பனித்துளி..

# சுபா





# அனல் மேலே பனித் துளி..

**1**

**பி**ரேமா முகத்தை சோப்புப் போட்டுக் கழுவினாள். சிவப்பு காசித் துண்டால் மொறமொறவென்று அழுத்தித் துடைத்தாள். விளக்கைப் போட்டுவிட்டு, ஓர் எதிர்பார்ப்புடன், கண்ணாடியில் முகத்தைப் பார்த்தாள். கண்ணாடியில் தெரிந்த தனது பிம்பத்தைப் பார்த்தவுடன் தொட்டாற்சிணுங்கி மாதிரி முகம் சுண்டிப் போனாள்.

கண்ணாடி பிம்பத்துக்கு முகம் முழுக்கக் கறுப்புக் கறுப்பாய்த் திட்டுகள் அங்கங்கே அப்பியிருந்தன, கண்ணுக்குக் கீழே கட்டை விரல் அளவுக்கு; மூக்குக்குப் பக்கத்தில் தொடங்கி கன்னம் முழுவதும், உதட்டுக்கு இடப்புறம் மை தீற்றிய மாதிரி. முகம் முழுக்க யாரோ கை தவறுதலாய் கறுப்பு வண்ணத்தை இறைத்து விட்டிருந்தார்கள்.

'அது நான் இல்லை. என் பிம்பம்' என்று ஏமாற்றிக்கொண்டாள். பாத்ரூம் விளக்கை அணைத்தாள். சாய்ந்திருந்த ஒட்டடைக் குச்சியை நிமிர்த்தி வைத்தாள். வெளியில் வந்தாள்.

ஜன்னல் இல்லாத கூடம் உலைக்களம் மாதிரி இருந்தது. புழுங்கியது. வீட்டுக்கு வெளியே நூறடி தூரத்தில் ஏதோ ஓர் எக்ஸ்ப்ரஸ் ரயில், பிரதேசம் முழுவதையும் தனது ஹாரன் ஒலியால் நிரப்பி, கடந்து போயிற்று. தடால், தடால்!

கூடத்தில் அப்பா வாங்கிப் போட்டிருந்த மின் விசிறி உச்சியில் சோகையாய்ச் சுற்றியது. நிறைய முனகல்கள். அதற்கும் வயதாகிவிட்டது.

''அம்மா..''

பிரேமா திடுக்கிட்டாள். வைஷ்ணவியின் குரல். பூ மாதிரி, பறவையின் ஒற்றைச் சிறகு மாதிரி மென்மையான குரல். பிரேமா அறை மூலைக்குப் பார்வையை விரட்டினாள்.

வைஷ்ணவி படுக்கையில் உட்கார்ந்திருந்தாள். பாவாடை நாடாவைக் கை விரல்கள் திருகிக்கொண்டிருந்தன. பக்கத்தில் ஒற்றைப் போர்வைக்குள் வைஷ்ணவியின் உடன்பிறப்புகள் கழுத்து வரை காணாமல் போயிருந்தனர்.

''என்னடா ராஜா?'' என்று பரிவுடன் பிரேமா கேட்டாள். அந்த 'டா' உண்மையான அன்பை வெளிப்படுத்தியது.

''இன்னிக்கு எங்க கூடப் படுத்துக்க மாட்டியாம்மா?''

கூர்வாளால் இதயத்தைக் கீறுவது போன்ற கேள்வி. என்ன சொல்வது என்று யோசித்தாள். புரியாமல் நின்றாள்.

வைஷ்ணவியின் குரலில் நிச்சயம் ஏக்கம் இருந்தது. பிரேமாவின் பார்வை உள்ளறைக்குப் போயிற்று. அடக்கமான நீல விளக்கில் பாஸ்கரன் கட்டிலில் ஒருக்களித்திருந்தான், காத்திருந்தான்.

''சரிம்மா, நீ அப்பா கூடவே படுத்துக்க. பத்து நாளா எங்ககூட ஹால்லயே படுத்துக்கிட்டியா, அதான் கேட்டேன். அப்பாதான் ஊர்லேர்ந்து திரும்பி வந்துட்டாரே? நீ அங்கதானே படுத்துக்கணும்?''

பத்து வயது வைஷ்ணவி ஆச்சரியமாய் இருந்தாள். பிரேமா கூசும் கால்களுடன் நகர்ந்தாள். சுவிட்சை அமர்த்தினாள். கூடத்தை இருட்டாக்கிவிட்டு உள்ளறை வாசலில் காலை வைத்தாள்.

வைஷ்ணவி பாயில் படுத்துக்கொள்ளும் சத்தம் கேட்டது. அவளது சின்ன எதிர்பார்ப்பைக்கூட நிறைவேற்ற இயலாத கையறு நிலையில் இருக்கிறோமே என்று பிரேமாவின் தாயுள்ளம் மௌனமாக விம்மியது.

நோகாமல் உள்ளறைக் கதவைச் சாத்தினாள்.

''யாரு?'' என்றான் பாஸ்கரன்.

பிரேமாவின் அத்தனை நரம்புகளும் வெடித்தன. காதில் விழுந்தது நிஜமா, பிரமையா என்று ஒரு குழப்பமான சந்தேகம் மனத்தை ஊடுருவியது.

என்ன கேட்டான்? யாரு? யாரா? பன்னிரண்டு வருஷங்களாக அனுபவித்த அவளுடைய கதகதப்பு மறந்து போயிற்றா என்ன?

பிரேமா பதில் பேசாமல் அவனை நெருங்கினாள்.

பாஸ்கரன் படுக்கையில் நிமிர்ந்து உட்கார்ந்தான்.

''நீ குழந்தைங்க கூடப் படுத்துக்கப் போறேன்னு நெனைச்சேன்..''

மறுபடியும் மின்சார வார்த்தைகள்.

பிரேமா மெல்ல விசும்பினாள். அவன் பக்கத்தில் கட்டிலில் உட்கார்ந்தாள்.

பாஸ்கரன் சட்டென்று விலகிக்கொண்டான்.

''என்ன நெனைச்சிட்டு இந்த மாதிரி பேசறீங்க? நானென்ன திடீர்னு வேண்டாதவளாயிட்டேனா?''

''ஷ்..ஷ்ஷ்'' என்றான் பாம்புச் சீறலாய். ''மறுபடியும் நீலி ஆகாதே. நான் என்ன டைவர்ஸா பண்ணிட்டேன்? ஊர் ஊரா வெய்யில்ல சுத்தினது. உடம்பு முடியலே. நிம்மதியாப் படுக்க விடேன். ஹஸ்பெண்ட், வொய்ஃப் தினம் சேர்ந்துதான் படுக்கணும்னு சட்டம் இருக்கா என்ன?''

பிரேமாவுக்கு அழுகை நின்று போயிற்று. சட்டெனக் கோபம் கொடியேற்றிக் கொண்டது. ''சேர்ந்து படுக்கறதைப் பத்தி நீங்களா






'' அவரு தன் பசங்களை மெட்ரிக்குலேஷன் ஸ்கூல்ல படிக்க வெச்சே பரம ஏழையாயிட்டார்!''

''அப்ப மெட்ரிக்'குசேலன்'னு சொல்லு!''

- வீ. விஷ்ணுகுமார், கிருஷ்ணகிரி-1

பேசறீங்க? மாசத்துக்கு மூணு நாள் விட்டு வைக்கறதுக்குள்ள எவ்வளவு எரிச்சல் வரும் உங்களுக்கு? ஒவ்வொரு தடவை டூர் போய் வந்தவுடனே எந்த நேரம்னு கூடப் பார்க்காம இந்த ரூமுக்கு என்னை இழுத்துக்கிட்டு நுழைவீங்களே.. உங்களுக்கு அதெல்லாம் மறந்து போச்சா?'' என்றாள்.

குரலில் வெப்பம் இருந்தது. பாஸ்கரனைச் சுட்டது.

''ஷட் அப்'' என்றான். ''வெளியே கொழந்தைங்க படுத்திட்டிருக்கே, காதில விழுந்தா என்ன நெனைக்கும்?'' என்றான். குரல் எழும்பவில்லை. ஆனால் குண்டூசியின் கூர்முனைகளால் கோத்த மாதிரி குரல்.

''என்ன நெனைக்கும்? அம்மா அழகா இருந்தப்ப தினம் மாத்திரை போட்டுட்டுப் படுக்கைக்கு வரச்சொன்ன அப்பாவுக்கு இப்ப அம்மா அலுத்துப் போயிட்டா, பாவம்னு நெனைச்சிக்கும்.''

புயல்காற்று ஜன்னல் கதவு மாதிரி பாஸ்கரனின் கை அவள் கன்னத்தில் பாய்ந்தது. ''பொட்டை நாயே! சொல்லச் சொல்ல சத்தம் போடறே? ஆமா, நீ அழகா இருந்தப்ப எனக்குப் பிடிச்சிருந்தது. இப்ப உடம்பு பூரா வியாதி. நாலு எடத்துக்கு ஏறி இறங்கற சேல்ஸ்மேன் வேலை எனக்கு. உன்கூடப் படுத்துக்கிட்டு, இந்தக் கர்மம் என்னையும் பிடிச்சிட்டா நான் மூஞ்சியை வெளிய காட்ட முடியாது. அதனாலதான் கூடப் படுக்கமாட்டேன்றேன்.''

பாஸ்கரன் அடித்த கையை பெட்ஷீட்டால் அழுத்தித் துடைத்தான். பிரேமாவுக்கு ஆழி அலை அழுத்திய மாதிரி இருந்தது. கண்களில் நீர் உலர்ந்து போயிற்று, கோடைகாலக் கொள்ளிடம் மாதிரி.

''இப்ப நீ வெளிய போறியா? இல்லே, நான் போகட்டா?''

பிரேமா சிரிப்பையும் சந்தோஷத்தையும் தொலைத்தாள். இறுகிய முகத்தோடு கதவைத் திறந்தாள். சூடான ஹாலுக்கு வந்தாள்.

சுவிட்ச் போட்டு வைஷ்ணவி எதிரில் தன் அழுமூஞ்சி முகத்தைக் காட்ட பயமாக இருந்தது. சுவரில் கையை ஊன்றித் தடவிக்கொண்டே அறை மூலைக்குப் போனாள்.

சீர்காழிப் பாயின் முனை பாம்பு மாதிரி படமெடுத்திருந்தது. தண்ணீரில் ஆறி, வெயிலில் வதைபட்டு அந்த முனையில் அந்தச் சுருள் சாசுவதமாய்ச் சேர்ந்திருந்தது. நிமிர்த்துவது கஷ்டம் பாஸ்கரனின் கோணிப்போன மனசு மாதிரி.

''அம்மா?''

பிரேமா திடுக்கிட்டாள். எதிர்பார்த்த மாதிரியே வைஷ்ணவி இன்னும் தூங்கவில்லை.

''அம்மா, இங்க வாம்மா. நெறைய எடமிருக்கு. இப்படிப் படுத்துக்கோ'' மெல்ல நாணல் மாதிரி சரிந்தாள். வைஷ்ணவியின் மெலிதான தொடையை ஸ்பரிசித்தாள். அப்படியே அவளை அணைத்து இறுக்கிக்கொண்டு தலையணையில் தலையைத் தடாலென்று சாய்த்தாள்.

''அழாதம்மா. இது சரியாப் போய்டும். நான் முருகன்கிட்ட வேண்டிக்கிட்டிருக்கேன்..''

அதன் எலும்பு விரல்கள் அவளுடைய உலர்ந்த கன்னங்களைத் தடவிக் கொடுத்தது. உஷ்ணமான மூச்சுக் காற்று பிரேமாவின் கழுத்தில் படிந்தது.

''அம்மா, நீ குயவன் கிட்டப் போய் எழுதிப்பியாம்மா?''

''குயவனா, என்ன சொல்றே?'' என்று கேட்டாள். அழுகையின் தூவானம் தொண்டைக் குழாயில் கரகரத்தது.

''ஆமாம்மா. நீ நேத்திக்கு எங்க ஸ்கூலுக்கு எங்களைக் கொண்டுவிட வந்திருந்த இல்ல? எங்க டீச்சர்கிட்ட கூடப் பேசிட்டிருந்தியே..''

''ஆமா..''

''அவங்கதான் கேட்டாங்க, உங்கம்மாவுக்கு என்ன? அக்கி மாதிரி இருக்குதே? குயவன் கிட்டப் போய் எழுதிக்கறதுதானேன்னு..''

''அப்படீன்னா?''

''நானும் கேட்டேம்மா. பானையெல்லாம் செய்யற குயவன் கிட்டப் போய் முதுகைக் காமிக்கணுமாம். அவன் ஏதோ மந்திரம் போட்டு எழுதுவானாம்.





தோல் வியாதி சரியாப் போயிடுமாம். போய் எழுதிக்கிறியாம்மா?''

வைஷ்ணவிக்கு வயது ஏறக்கூடாது என்று சுவாமியை வேண்டிக்கொண்டாள் பிரேமா. வயது ஏறினால் இந்தக் கரிசனம் காணாமல் போய்விடும். அப்படியே இறுக்கிப் பிடித்து அதன் கன்னத்தை ஈரப்படுத்தினாள்.

''சூர்யாவையும் இந்துவையும் ஸ்கூல்லயே விட்டுட்டுப் போலாம்மா. நான் தொணைக்கு வரேன். நாளைக்கே போகலாமா?''

''ம்.''

பிரேமா வாயைத் திறக்கப் பிரியப்படவில்லை. திறந்தால் அத்தனையும் உடைத்துக்கொண்டு கிளம்பிவிடுமோ என்ற பயம். கை வைஷ்ணவியைத் தாண்டி சூர்யாவையும் சூர்யாவை நெருக்கிக்கொண்டிருந்த இந்துவையும் வருடியது.

வேண்டாத குழந்தையாய் இந்துவை வயிற்றில் சுமந்தபோதுகூட அவள் அழகுக்குக் கொஞ்சமும் குறை இருந்ததில்லை. பயமும் பதற்றமும், குற்ற உணர்வும் ஆளை அழுத்திக்கொண்டிருந்த அந்த எட்டு நீண்ட மாதங்களுக்குப் பின், மறுபடியும் இப்போது துக்கம். துக்க சாகரம். எல்லாம் யாரால்?

இத்தனை சுலபமாய் பாஸ்கரன், பார்த்த சினிமாவை மறந்ததுபோல நடந்து கொள்வது ஆச்சரியமாய் இருந்தது.

எட்டு வருஷங்களுக்கு முன் இரண்டாவதாய் சூர்யா பிறந்தபோது பாஸ்கரன் எவரெஸ்டைத் தொட்ட மாதிரி சந்தோஷப்பட்டான். அவன் முகத்தில் அதி திருப்தி. அதி பிரியம். லேசாகக் கவலை பூசின குரலில் அவன் அன்றைக்குப் பேசியது, இன்றைக்கும் பிரேமாவின் காதருகில் கேட்டது.

''ப்ரேம்..'' குரலில் என்ன ப்ரேமை? ''ப்ரேம், நல்லவேளை.. நமக்கு ராஜா பொறந்துட்டான். இனிமே இன்னொண்ணு நமக்கு வேண்டாம்.''

''ஆபரேஷன் பண்ணிக்கப் போறீங்களா?''

''ச்சே! டர்ட்டி! ஆபரேஷன்ங்கற பேச்சே வேண்டாம்..''

''ஏங்க?''

''எனக்குப் பிடிக்கலே. உள்ளூர ஒரு சந்தேகம் இருக்கு. பழையபடி சந்தோஷமா இருக்க முடியுமான்னு..''

''அப்ப, நான் பண்ணிக்கட்டுமா?''





''டார்லிங்.. அஜீத்துக்கும் எனக்கும் என்ன வித்தியாசம்?''

''அவரு தல.. நீங்க தறுதல!''

- வீ. விஷ்ணுகுமார், கிருஷ்ணகிரி-1

''யார் பண்ணிக்கிட்டா என்ன ப்ரேம்? நீ பண்ணிக்கிட்டா மூணு மாசத்துக்கு நான் ஒங்கிட்ட வரக்கூட முடியாமப் போய்டும். ஒனக்குத்தான் தெரியுமே ப்ரேம், எனக்கு 'அது'ன்னா பிடிக்கும்னு.''

''பின்ன எப்படிங்க?''

''ஸிம்பிள்! மாத்திரை போட்டுக்கிட்டாப் போச்சு! டெய்லி ஒரே ஒரு டாப்லெட். ஒரு மாத்திரையால என்ன ஆய்டும்? நான் வாங்கிட்டு வரேன்..''

நான்கு வருடங்கள் நாள் தவறாமல் போட்டு வந்த மாத்திரை ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் எப்படியோ மறந்து போயிருக்கவேண்டும். கிட்டத்தட்ட ஐம்பது நாள் கழித்துத்தான் காலண்டரைப் பார்க்கவேண்டும் என்கிற பிரக்ஞை வந்தது.

விஷயம் தெரிந்து பாஸ்கரன் பதறினான். அவன் பதற்றத்தை பிரேமா உள்ளூர ரசித்தாள். உடனே டாக்டரிடம் இழுத்துப் போனாள்.

''கங்கிராட்ஸ்'' என்றார் லேடி டாக்டர் மூக்குக் கண்ணாடியைத் துடைத்து மாட்டிக்கொண்டு.

''எங்களுக்கு வேண்டாம் டாக்டர். அபார்ஷன் பண்ணிடுங்க ப்ளீஸ்!''

''அபார்ஷனைத் தாங்கற உடம்பாத் தெரியலையே இது? முன்னாடியே கேர்ஃபுல்லா இருந்திருக்கணும்..''

''நேத்து வரைக்கும் மாத்திரை போட்டுக்கிட்டுத்தான் வந்தேன் டாக்டர். எப்படியோ தவறிப் போய்டுச்சி போலருக்கு'' என்றாள் பிரேமா. குரல் திருட்டுத்தனமாய் தின்பண்டம் தின்ன வந்து மாட்டிக்கொண்ட சின்னப்

பையன் குரல் மாதிரி இருந்தது.

“மை காட்!” என்றார் டாக்டர். முகத்தில் தொண்ணூறு சதவிகிதம் அதிர்ச்சி இருந்தது. “யூ மீன், இந்த அம்பது நாளும் நீ, வயத்தில குழந்தை இருக்கறது தெரியாம மாத்திரை போட்டுட்டே வந்திருக்கேன்னா சொல்றே?”

“ஆமா டாக்டர். ஏன் டாக்டர்?”

“முண்டம், இன்னும் மெதுவாக் கேள்” என்று டாக்டர் பன்மையைத் தொலைத்தாள். “படிச்சவதானே நீ?” என்றாள். குரலில் ஒரு ரெயில் வண்டி அளவு ஏளனம் இருந்தது.

முதல் முறையாக பிரேமாவின் மனத்தில் பயம் மேக மறைவிலிருந்து எட்டிப் பார்க்கும் நிலா மாதிரி எட்டிப் பார்த்தது.

“தப்பா டாக்டர்?”

“முட்டாள்” என்று இரைந்தாள் டாக்டர். “தப்பான்னா கேக்கறே? வயத்தில் இருக்கிற குழந்தையை நீ சாப்ட்ட ஒவ்வொரு மாத்திரையும் அட்டாக் பண்ணியிருக்கும். பொறக்கப் போற குழந்தைக்குக் கண்ணில்லாம போகும், இல்ல கால் சூம்பிப் போய் இருக்கும், இல்ல பேச்சு வராது, இல்ல மூளை வளர்ச்சியில்லாமப் போகும்..”

“அய்யோ” என்று பிரேமா அந்த டாக்டரின் கைகளைப் பற்றிக்கொண்டாள். “அந்த மாதிரி ஆய்டும்னா அந்தக் குழந்தையே வேண்டாம் டாக்டர்..”

“சினிமா டிக்கெட்டா இது? ஈஸியா டிஸ்போஸ் பண்றதுக்கு? ரத்தமும் சதையுமா ஓர் உயிர்..”

“இப்ப என்ன பண்றது டாக்டர்?”

“உப்பு தின்னா தண்ணி குடிச்சித்தான் ஆகணும். எட்டு மாசம் வெயிட் பண்ணு. பெத்துப் போடு.”

அப்புறம் பாஸ்கரன் ‘ஸ்பெஷலிஸ்ட்’ என்று தேடித் தேடி இரண்டு மூன்று டாக்டர்களிடம் கூட்டிப் போனான். பார்த்த டாக்டர்கள் யாருமே வயிற்றில் கை வைக்கமாட்டேன் என்று சொல்லிவிட்டார்கள்.

‘ஒன் ஒடம்பு தாங்காது.’

அந்த எட்டு மாதங்களும் விடியலின் விழிப்பிலும், உச்சி வெயிலின் வெம்மையிலும், இரவின் மை இருட்டிலும் ஒரே குருட்டுச் சிந்தனைதான்.



‘பிறக்கப் போகிற குழந்தைக்கு என்ன ஊனம் இருக்குமோ?’

கண் பூத்திருக்குமோ, காது மூடியிருக்குமோ, குரல் செத்துப் போயிருக்குமோ என்று பயந்து பயந்து வியர்த்ததெல்லாம் வீணாகிப் போயிற்று.

குழந்தை ரோஜாவின் மெல்லிதழாய் மிருதுவாய் பிறந்தது. கருவிழிகளில் ஈரம் பளபளத்தது.

தூக்கிவாரிப் போடுகிற மாதிரி அழுதது. முப்பது நாட்களில் பார்வையை இரை தேடும் பல்லி மாதிரி அலையவிட்டது. அறுபது நாட்களில் கிலுகிலுப்பை ஆட்டிய திசையில் திரும்பிப் பார்த்தது. தொண்ணூறு நாட்களில் கையை நகர்த்திக் காட்டியபோது பார்வையைக் கூடவே நகர்த்தியது.

‘ங்கா’ ‘ககா’ ‘மமா’ ‘ப்பா’ என்று மெல்ல மெல்ல அதன் வாக்கு ஞானம் விரிவடைந்துகொண்டே போயிற்று.

‘இந்த டாக்டர்களே சுத்த மோசம். அநாவசியத்துக்குப் பயமுறுத்திவிட்டார்கள்’ என்று அவள் நினைத்தாள். தண்டவாளத்து ரயில் சத்தத்தை சங்கீதமாக நினைத்தாள். ‘இந்து’ ‘இந்து’ என்று உவகையுடன் உச்சி மோந்தாள்.

அப்போதுதான் கிருஷ்ண ஜெயந்தி வந்தது. சீடையும் முறுக்குமாய் வீடு இறைபடுகிற நேரந்தான் அந்த இடி அவள் மெல்லிய மனத்தில் நெருப்புக் கட்டி மாதிரி ஊடுருவியது.

## 2

இன்றைக்கு நினைத்தாலும் பிரேமாவுக்கு உடம்பில் அதிர்ச்சியும் நடுக்கமும் பரபரவென்று கரப்பான்களாய் ஓடின.

இந்துவுக்குப் பசியெடுக்கிற நேரம் என்று வாசல்புறமாய் இடுப்பில் தூக்கி வைத்து மேகத்தையும் நிலாவையும், தூரத்தில் சில் அவுட்டாய் ஓடிய ரெயிலையும் மாற்றி மாற்றி வேடிக்கை காட்டிக்கொண்டிருந்தாள்.

திடீரென இடுப்பைச் சுற்றி இருந்த சின்னக் கால்கள் இடுக்கி மாதிரி இறுக்கின. இந்துவின் உடலில் ஒரு விறைப்பு வந்தது. பிரேமாவுக்கு உடன் அது உறைத்தது. ஸ்ப்ரிங் பொம்மை மாதிரி தலை குழந்தைக்கு விலுக் விலுக் என்று பின்புறம் தள்ளியது.

கண்கள் இமைக்குள் செருகிக்கொண்டன. வாய்க்கடையில் தயிர்

கடைந்த மாதிரி வெள்ளை நுரை.

பிரேமா பதறிப் போனாள். பாத்திரத்து ரசம் சாதத்தைக் கீழே இறைத்துவிட்டு உள்ளே ஓடினாள்.

பாஸ்கரன் வீட்டில் இல்லை. வைஷ்ணவி சீடைகளைப் பற்களுக்கிடையில் கொடுத்து நொறுக்கியவாறு மடியில் சூர்யாவைப் போட்டுக்கொண்டு கதை சொல்லிக்கொண்டிருந்தாள். அம்மாவையும் அவள் பதற்றத்தையும் பார்த்துவிட்டு சட்டென்று எழுந்துகொண்டாள்.

''வைஷ்ணவிம்மா, இந்து பாப்பாவுக்குத் திடீர்னு உடம்பு சரியில்லை. டாக்டர்கிட்ட எடுத்துட்டுப் போறேன். நீ வீட்டைத் தாப்பா போட்டுட்டு இரு. யார் வந்து கதவைத் தட்டினாலும் திறக்கவேண்டாம். இதோ ஓடிப் போய்ட்டு வந்துடறேன்.''

வைஷ்ணவி கேள்வி எதுவும் கேட்காமல் 'சரி' என்றாள்.

''குழந்தைக்கு ஃபிட்ஸ்'' என்றார் அடுத்த தெரு டாக்டர் பதற்றம் இல்லாமல். அப்போதைக்கு ஒரு ஊசி போட்டார். அன்றைக்கு இரவு முழுக்க குழந்தை தூங்கும் போதும்கூட வைத்த கண் எடுக்காமல் வெறித்துக்கொண்டிருந்தாள் பிரேமா.

கட்டிலில் பாஸ்கரின் தேவைக்காக அடி பணிந்திருக்கும் நேரம் பார்த்து இதற்கு வலிப்பு வந்து அதைக் கவனிக்காமல் விட்டுவிடுவோமோ என்னும் அதீத பயம் அவள் நெஞ்சில் நிழலாடிக்கொண்டிருந்தது.

மறுநாள் காலை அவளுக்குப் பிரசவம் பார்த்த டாக்டர் நந்தகுமாரிடம் அழைத்துப் போய் காட்டுகிற வரை அந்தக் கலக்கம் இருந்தது.

''நீங்க இதை வயித்தில வச்சுக்கிட்டு தினம் போட்டுக்கிட்ட மாத்திரைங்க செஞ்ச வேலை இது'' என்றார். ''கொஞ்சம் கவனமாப் பாத்துக்கணும். இந்த மாதிரி ஃபிட்ஸ் வரப்பல்லாம் குழந்தை நாக்கு கடிச்சிக்காமப் பாத்துக்கணும். எப்பவும் கையில் ஒரு ஸ்பூன் வெச்சிக்கிட்டிருக்கறது பெட்டர். ஃபிட்ஸ் வந்தவுடனே அதை பல்லுக்கு நடுவுல சொருகிடணும். உடனே பக்கத்துல இருக்கற டாக்டர் கிட்ட கூட்டிட்டுப் போயிடணும்.''

டாக்டர் நந்தகுமார் மீது பிரேமாவுக்கு ஆகாய அகலத்துக்கு நம்பிக்கை, மரியாதை.

காரணம் இருந்தது.

'இத்தனை பேருக்குப் பிரசவம் பாக்கற டாக்டருக்குப் புள்ளைங்க இல்ல. பெத்துப் போடாமலேயே மகராசி பூவோட, பொட்டோட போய்ச் சேர்ந்துட்டா' என்று க்ளினிக் ஆயா சொன்னதிலிருந்துதான்





ஆசிரியர்: கிரிக்கெட் விளையாட்டைப் பற்றி ஒரு பக்க அளவில் கட்டுரை எழுத்திட்டு வரச் சொன்னேனே.. ஏன் எழுதல?

மாணவன்: மழையினால் இன்று ஆட்டம் கேன்சல் செய்யப்பட்டது சார்!

ஆர். பஞ்சவர்ணம், போரூர்.

அவளுக்கு அவர் மீது அத்தனை ஒட்டுதல்.

ராத்திரி நேரத்து ரீங்காரங்களும், தடக் தடக் ஃபேன் சப்தமும் அழுத்திக் கொண்டிருந்த நடுராத்திரி. பிரேமாவிற்குச் சட்டென்று அந்த எண்ணம் வந்தது. டாக்டர் நந்தகுமாரிடம் போய் இந்த உடம்பைக் காண்பித்தால் என்ன?

மறுநாள் நினைவு கலையுமுன் மருந்துக் கடையிலிருந்து நர்ஸிங் ஹோமுக்கு ஃபோன் செய்தாள்.

தொண்டை கிழிகிற குரலில் ரிசப்ஷனிஸ்ட் 'ஹலோ' என்றாள். டாக்டர் கான்ஃபரன்ஸிற்குப் போயிருக்கும் விஷயத்தைச் சொன்னாள். ஒரு வாரம் காத்திருக்கச் சொன்னாள். அவசரம் என்றால் டாக்டர் செரியனிடம் அப்பாயின்ட்மென்ட் வாங்கிக்கொள்ளலாம் என்றாள்.

பிரேமா குரலில் சற்றே வருத்தத்தைத் தோய்த்துக்கொண்டு, ''வேண்டாம்'' என்றாள். ஏமாற்றம் அவளைத் தாக்கியது. அதற்கு முன்னால் குயவனிடம் போய் எழுதிக்கொள்ளலாமே என்று தோன்றியது.

பாஸ்கரனிடம் சொன்னபோது சிரித்தான். ''போ, அவன் ஒருத்தன் கை படறதுதான் பாக்கி இருந்தது. அதுவும் நடக்கட்டும். ஆனா ஒண்ணு சொல்றேன், கேட்டுக்க. இனிமே இந்தக் கண்றாவி உன்னைப் பிரிந்து போகப் போறதில்லை. சாகற வரைக்கும் கூட வரத்தான் போகுது..'' என்றான்.

நுங்கம்பாக்கத்தில் சில சிதறிய குடிசைகள் இருந்த இடத்தில் குயவன் இருந்தான். நாளைக்குச் சாகப் போகிறவன் மாதிரி தெரிந்தான். புருவ மேட்டில் கையை வைத்துக்கொண்டு அவள் முகத்தை ஆராய்ந்தான்.

''பாத்தா அக்கி மாதிரி இல்லியேம்மா. நீ ஆராவது இங்கிலீசு டாக்டராண்ட காட்றதுதானே?''

''இல்லே, சரியாப் போகும். நீங்க எங்கம்மாவுக்கு எழுதுங்க'' என்றாள் வைஷ்ணவி அவசரமாய்.

''ஆத்தா மேல என்னா அக்கறை பாத்தியா இதுக்கு?'' என்று கிழவி வைஷ்ணவியின் பக்க நெற்றியில் கை வைத்து விரல் மடித்து திருஷ்டி கழித்தாள்.

''வா'' என்றான் கிழவன். செம்மண்ணைக் குழைத்து எடுத்து வாயால் ஏதோ முணுமுணுத்துக் கொண்டே கறுப்பு ஆக்ரமித்த கன்னங்கள், கைகள் என்று தேய்க்க ஆரம்பித்தான்.

டாக்டர் நந்தகுமார் நெற்றியில் பொடித் திருந்த வியர்வையைக் கர்ச்சீஃபால் ஒற்றி எடுத்தார். நாற்பது வயதிற்குக் கொஞ்சம் அவசரமான நரை. ஃப்ரேம் போட்ட கண்ணாடி மூக்கின் துவக்கத்தில் ஒரு நிரந்தர வடுவைத் தந்திருந்தது. கண்களில் காந்தங்கள்.

சின்ன முத்து மாதிரி இருந்த சுவிட்சைத் தொட்டதும் மின்சாரம் பக்கத்து அறைக்குப் பாய்ந்து 'கிர்ரிக்' என்று நர்ஸை அழைத்தது.

''எஸ், டாக்டர்?''

''நான் ரெடி. பேஷண்ட்ஸை அனுப்பு..''

வரிசையில் ஆறாவதாய் வந்த பிரேமாவை முதலில் அடையாளம் புரியவில்லை. கண்கள் அவள் முகத்துத் தீப்புண்களை ஜீரணித்து நகர்ந்து, அவள் கையைப் பிடித்துக்கொண்டு நாற்காலி உயரத்துக்கு நின்றிருந்த இந்துவின் மீது தயங்கின. சட்டென்று புரிந்தது. கூடவே முகத்தில் அதிர்ச்சி.

''பிரேமால்ல நீ?'' என்றார். ''ஸிட் டவுன்.''

பிரேமாவுக்குச் சந்தோஷமாய் இருந்தது. மூன்று வருஷங்களுக்கு முன்பு பார்த்த முகத்தை இன்னும் நினைவில் வைத்திருக்கிறாரே? உட்கார்ந்தாள். ஏ.ஸி.யின் ரீங்காரம், குளுமை இரண்டும் இதமாய் இருந்தன.

''எப்படி இருக்கே இந்து?'' என்றார் குழந்தையைப் பார்த்து.

இந்து அகலக் கண்களை மேலும் அகலமாக்கிக்கொண்டு ஒரு மிரண்ட பார்வை பார்த்தாள்.

''சமாளிச்சுக்குது'' என்றாள் பிரேமா, இந்துவைப் பார்த்து, அதன் கூந்தலை வருடிக் கொண்டே.

''என்ன இது உன் உடம்பெல்லாம்?''

''நீங்கதான் சொல்லணும் டாக்டர்'' என்றாள் பிரேமா.



பைத்தியக்காரத்தனமாகப் பொங்கிய அழுகையை அடக்கினாள். ''மூணு மாசத்துக்கு முன்னால சின்னதாக் காதுக்குப் பின்னால ஒரு கறுப்புப் புள்ளி வந்தது. சீரியஸா எடுத்துக்கலே. அப்புறம் கழுத்தில ஒண்ணு, கால்ல ஒண்ணுன்னு ஆரம்பிச்சி உடம்பு முழுவதும் பரவ ஆரம்பிச்சதும் பயந்து போய்ட்டேன். வண்ணான்படை, அக்கி, அது, இதுன்னு என்னென்னவோ பேர் வச்சாங்க. பாட்டி வைத்தியம் பண்ணேன். சரியாகலை. ஸ்கின் ஸ்பெஷலிஸ்ட் எழுதிக் கொடுத்த மருந்து கேக்கலை. இப்ப கொஞ்ச நாளா எனக்கு மேல் வயிறு பெரிசாயிட்ட மாதிரி தோணுது. அடிக்கடி மஞ்சளா வாந்தி. தலைசுத்தல். முதல்ல நான் கன்ஸீவ் பண்ணிட்டேனோன்னுதான் பயந்தேன். நல்லவேளை, இன்னொரு குழந்தை இல்லேன்னு தெரிஞ்சி போச்சு. எனக்குப் பயமாருக்கு டாக்டர்'' கடைசி வாக்கியத்தின்போது அழுகை திமிறிக்கொண்டு வந்துவிட்டது.

நந்தகுமார் அவள் அழட்டும் என்று காத்திருந்தார்.

''அவர்.. பாஸ்கரன்தான பேரு? வரலை?''

''அவர் ஊர்ல இல்லே டாக்டர்'' என்று ஏற்கெனவே தீர்மானித்திருந்த பொய்யைச் சொன்னாள்.

''இருக்காரேம்மா'' என்றது இந்து. ''ஆஃபீஸ்தான போயிருக்காரு?''

பிரேமா நெளிந்தாள். நந்தகுமார் அதுபற்றி மேலே பேசாமல் ஜாக்கிரதையாகத் தவிர்த்தார்.

''என்ன என்ன மருந்து சாப்ட்டிருக்க? ப்ரிஸ்க்ரிப்ஷன்லாம் கொண்டு வந்திருக்கியா?''

எடுத்து நீட்டினாள்.

பார்த்தார். ஏ.ஸி.யை மீறி நெற்றியில் துளிர்த்த வியர்வையைத் துடைத்துக் கொண்டார். நிமிர்ந்தார்.

''நான் சொன்னா ஒண்ணு கேப்பியா?''

''சொல்லுங்க டாக்டர்..''

''நீ சாப்பிட்டிருக்கிற மருந்துக்கெல்லாம் மசியலைங்கறதைப் பார்க்கறப்ப இது சாதாரண தோல் வியாதி இல்லன்னு எனக்குத் தோணுது..''

''அய்யய்யோ..''

''பயப்படாத. எக்ஸ்ரே எடுத்து, ப்ளட் டெஸ்ட் பண்ணிப் பாத்துரலாம். அவசியம்னா நீ இங்கேயே ஒரு வாரம், பத்து நாள் அட்மிட் ஆகி

ட்ரீட்மெண்ட் எடுத்துக்க வேண்டி இருக்கும். என்ன சொல்ற?''

''உயிருக்கு ஒண்ணும் ஆபத்தில்லையே டாக்டர்?'' பிரேமாவின் குரல் அருவியில் குளித்த குழந்தை மாதிரி நடுங்கியது. ''எல்லாம் சின்னச் சின்னப் பசங்க. அதுங்களைத் தவிக்க விட்டுட்டுப் போயிடப் போறேனோன்னு பயமாயிருக்கு.''

''எக்ஸ்ரே ரிசல்ட்லாம் வரதுக்கு முன்னால ஒண்ணும் சொல்ல முடியாது பிரேமா. பயப்படறதுக்கு ஒண்ணுமில்ல.''

டாக்டர் தம் வெள்ளைப் பேடில் வரிசையாய் எழுதினார். டர்ர் என்று கிழித்துக் கொடுத்தார்.

''இங்கேயே எல்லா டெஸ்ட்டும் பண்ணிக்கலாம். பின்னால் போய் தொரைன்னு கேளு. எக்ஸ்ரே யூனிட்டை அவன்தான் பாத்துக்கறான்.''

''நெறைய செலவாகுமா டாக்டர்?''

டாக்டர் அவளிடம் கொடுத்திருந்த தாளைப் பறித்தார். பின்னால் ஏதோ எழுதிக் கையொப்பமிட்டார்.

''நீ ஒண்ணும் குடுக்கவேண்டாம். லாப் என்னோடதுதான். பின்னால எழுதிக்கொடுத்திருக்கேன். ஆல் தி பெஸ்ட். ஷ்.. அழாத, அழற மாதிரி ஒண்ணும் சீரியஸாயிடலே.''

பிரேமா கண்களைத் துடைத்துக்கொண்டு எழுந்தாள்.

''இந்தூ.. இந்தும்மா'' என்று குழந்தையின் கன்னத்தைத் தட்டிக் கொடுத்தார். காதைப் பிடித்து மிருதுவாய் நிமிண்டினார். அது அம்மாவோடு இன்னும் இறுக்கிக் கொண்டது.

''பாஸ்கரன் கிட்டச் சொல்லு ட்ரீட்மெண்ட் ஃப்ரீதான்னு. நர்ஸிங் ஹோம்ல வந்து சேர்ந்துடு. ம்?''

பிரேமா மௌனமாய்த் தலையை ஆட்டினாள். வெளியே வந்தாள். காரிடாரில் நடக்கையில் சுற்றிலும் பார்வையை ஓடவிட்டுக்கொண்டு ஆச்சரியமாய் வாய் பிளந்திருக்கும் இந்துவைப் பார்த்தாள்.

இந்துவை முதல் தடவை அந்த ஃபிட்ஸ் தாக்கியபோது நந்தகுமார் மருந்து எழுதிக் கொடுத்துவிட்டுச் சொன்னது நினைவுக்கு வந்தது.

''நான் ஒண்ணு சொன்னா தப்பா எடுத்துக்க மாட்டியே?''

''என்ன டாக்டர்?''

''குழந்தையை எப்பவும் கவனமாப் பாத்துக்க உன்னால முடியுமா?''



''இன்னிக்கு வந்த தபாலைப் பார்த்தப்புறம் டாக்டர் ஏன் கோபமா இருக்கார்?''

''அவர் எழுதி அனுப்பின சிறுகதை, 'அறுவையை மருத்துவமனையுடன் நிறுத்திக் கொள்ளவும்'ங்கிற குறிப்புடன் திரும்பி வந்துள்ளதாம்!''

- ஆர். பஞ்சவர்ணம்,
போளூர்



''பாத்துப்பேன் டாக்டர்..''

''எதுக்குக் கேட்டேன்னா, எனக்குக் குழந்தைங்க கிடையாது. உனக்குத் தெரியும்னு நெனைக்கறேன்..'' தயங்கினார்.

''சொல்லுங்க டாக்டர்..''

''நான் அடுத்த வருஷம் ஃபாரினுக்குப் போகவேண்டி வரும். அங்க எடுத்துட்டுப் போய் இதுக்கு ட்ரீட்மெண்ட் கொடுக்கலாம்னு நெனைக்கிறேன். பெண் குழந்தையா வேற போயிட்டது. ஒனக்குச் சிரமமா இருக்கலாம். என் பொறுப்பில விட்டா நான் ஜாக்கிரதையாப் பாத்துப்பேன். என்னையும் அப்பான்னு கூப்பிட ஒரு ஆத்மா இருக்கும். எனக்கு இந்துவை தத்துக் கொடுப்பியா பிரேமா?''

இந்துவையா? ஏன் இந்து? நினைத்தால் ஆரோக்கியமான குழந்தைகள் ஆயிரம் கிடைக்குமே?

மனதில் தோன்றியதை அவரிடமே கேட்டாள்.

''ஆரோக்கியமான குழந்தையை யார் வேணும்னாலும் பாத்துக்கலாம் பிரேமா. ஒரு டாக்டரோட கவனிப்புதான் தேவைன்னு இருக்கிற இந்த மாதிரி கொழந்தைங்களைத்தான் அம்மா, அப்பால்லாம் சுலபமா வெறுத்து ஒதுக்குவாங்க..''

''அவரைக் கேட்டுச் சொல்றேன் டாக்டர்..''

பாஸ்கரிடம் சொன்னதும் சீறினான்.

''பெத்துப் போட்ட அம்மாவும் அப்பாவும் உயிரோட இருக்கறச்சே அனாதை மாதிரி இன்னொருத்தனுக்கு நாம ஏன் தத்துக் கொடுக்கணும்? உன்னால கவனிச்சுக்க முடியலேன்னா சொல்லு. இந்துவை நான் கவனிச்சிக்கறேன். நாளைக்கு நாலு பேர் பாஸ்கரன் தன்னால

முடியாதுன்னு கொழந்தையை யாரோ டாக்டருக்கு வித்துட்டான்னு பேசிடக் கூடாது. முடியாதுன்னு சொல்லு..''

அதே பாஸ்கரன்தான் இன்றைக்குப் பெண்டாட்டிக்கு வியாதி என்றதும் டாக்டரிடம் அழைத்து வரக்கூட நேரமில்லை என்று விலகிக்கொண்டான்.

அர்த்தம் விளங்காத ஒரு அதீத பயம் நெஞ்சைச் சூழ, எக்ஸ்ரே யூனிட்டைப் பார்த்து மெல்ல நடந்தாள் பிரேமா.

இந்து கூடவே துள்ளிக்கொண்டு வந்தது.

3

கதவை இரண்டு முறை தட்டிவிட்டு பாஸ்கரன் நுழைந்தான்.

''கமான், கமான்'' என்றார் டாக்டர்.

பின் டிராயரிலிருந்து சில பேப்பர்களை எடுத்து மறுபடியும் அவன் எதிரில் ஆராய்ந்தார்.

பாஸ்கரின் முகத்தில் கவலை தெரிந்தது. ஓர் ஓரத்தில் பயம் தெரிந்தது.


''என்ன ஆச்சி டாக்டர்?''

''பிரேமா தினம் ஒரு தடவை தவறாமப் போட்டுக்கிட்டு வந்த மாத்திரைதான் அத்தனை பிராப்ளத்துக்கும் காரணம். எந்த டாக்டர் சஜஸ்ட் பண்ணின மாத்திரை அது?'' என்றார் அவனைக் கண்ணுக்குள் பார்த்து. அவன் பார்வையை நகர்த்திக் கொண்டான்.

''நானேதான் வாங்கிட்டு வந்தேன்..''

''எல்லாருக்கும் எல்லா மாத்திரையும் ஒத்துக்காது பாஸ்கரன். இந்த மாத்திரை பிரேமாவுக்கு ஒத்துக்கலே. லிவரை அஃபெக்ட் பண்ணிடிச்சி. லிவர் சரியா வேலை செய்யாததால ரத்தம் பூரா அழுக்கு கலந்திருக்கு. அதுதான் திட்டுத் திட்டா உடம்பு முழுக்க இப்படிப் பரவியிருக்கு. அழுகிப் போன செல்கள்லாம் அத்தனை பாகத்துக்கும் பரவிடிச்சி. இங்க அட்மிட் பண்ணித்தான் ட்ரீட் பண்ணணும். பட், விஷயம் நம்ம கையை மீறிப் போய்டிச்சி. ஃபிஃப்டி ஃபிஃப்டிதான் சான்ஸ். லிவர்ல இருக்கிற பாய்ஸனை எடுத்தாகணும். நினைவு தவறினா கோமாலகூட விழுந்துடலாம்..''





''டாக்டர்..''

''இப்ப ஷாக் ஆகறதில அர்த்தமில்ல பாஸ்கர். ஆரம்பத்திலேயே காமிச்சிருக்கணும். ஐ வில் டு மை பெஸ்ட். உடனே அட்மிட் பண்ணிடுங்க..''

பாஸ்கரன் கண்ணாடி முன் உட்கார்ந்திருந்தான். மீசையில் ஒரு முடி மட்டும் சற்று வளைந்து மேற்புறம் திமிறிக்கொண்டிருந்தது. கத்தரிக்கோலின் நுனியால் அதை நறுக்கினான். கன்னங்கள் செழிப்பாய் இருந்தன. காதோர முடியில் இரண்டு வெள்ளையாய்த் தெரிந்தது.

'ச்சே!' என்று சலித்துக் கொண்டான். போன வாரம் போட்ட 'டை' அதற்குள்ளாகவா பல் இளிக்கும்? சீப்பு நுனியில் மையைத் தோய்த்து வெகு கவனமாய் அதற்கு கறுப்புப் பூசிக்கொண்டிருந்தபோது ''அப்பா'' என்று குரல் வந்தது.

திரும்பாமல் கண்ணாடியில் முகத்தைச் சற்று நகர்த்தி வாசல் பிம்பத்தைப் பார்த்தான். வைஷ்ணவி நின்றிருந்தாள். அவளுக்குப் பின்னால் சூர்யாவின் முகம் தெரிந்தது.

''என்ன?'' என்றான் திரும்பாமலேயே.

''மணி ஒன்பது ஆச்சுப்பா'' வைஷ்ணவி உள்ளே வராமலேயே சொன்னாள்.

''அதுக்கென்ன?''

''அம்மா வாந்தி எடுத்திட்டுப் படுத்திருக்காங்கப்பா. டாக்டர் வீட்டுக்குக் கூட்டிக்கிட்டுப் போகணுமே?''

சட்டென்று கத்தரிக்கோலை வைத்துவிட்டு பாஸ்கரன் திரும்பினான். முகத்து ருத்திரம் கண்டு சூர்யா, அக்காவின் முதுகில் காணாமல் போனான்.

''நீ எனக்கு ஞாபகப்படுத்தறியா?'' என்றான் கோபமான குரலில்.

''இல்லைப்பா..'' வைஷ்ணவி ஓரடி பின் வைத்தாள். ''வந்து.. நாங்க ஸ்கூலுக்குப் போக டயமாச்சே. நீங்களே அம்மாவைக் கூட்டிட்டுப் போறீங்களான்னு கேக்கத்தான்..''

''சாப்பிட்டாச்சா நீங்க ரெண்டு பேரும்?''

''ம்ம்..''

''தனியாப் போவீங்களா?''



ஒருவர்: நான் வரும் போதெல்லாம் சிரிச்சுக்கிட்டே இருக்கீங்களே.. எப்படி சார்?

மற்றவர்: 'துன்பம் வரும் வேளையில் சிரிங்க'னு வள்ளுவரே சொல்லியிருக்காரே!

- ஆர். பஞ்சவர்ணம், போளூர்



''ம்..''

''அப்ப நீங்க ஸ்கூலுக்குக் கிளம்பிப் போற வழியைப் பாருங்க..''

''அம்மா?''

''எனக்குத் தெரியும். பெரியவங்களுக்கு எடுத்துச் சொல்ற அளவுக்கு வந்துட்டியா? நீ ஒன் வேலையைப் பாரு. ச்சே, நிம்மதியா ஷேவ்கூடப் பண்ணிக்க முடியலே இந்த வீட்ல..''

வைஷ்ணவி அதற்கு மேல் அங்கு நிற்கவில்லை. தரையில் ஒரு மூலையில் நத்தை மாதிரி சுருட்டிக்கொண்டு படுத்திருந்த அம்மாவை நெருங்கினாள். கன்னத்தில் முத்தமிட்டாள்.

''ஸ்கூலுக்குப் போய்ட்டு வரட்டுமாம்மா?'' என்றாள்.

பிரேமா தலையசைத்தாள்.

''சூரியையும் இந்துவையும் கூட்டிட்டுப் போறேன்'' என்றாள்.

''ம்'' பிரேமாவுக்கு முழுசாய்க் கண்களைத் திறந்து பார்க்கிற அளவுக்குக் கூடத் திராணியில்லை.

வைஷ்ணவி கட்டிலருகே நின்று அம்மாவுக்கு விசிறிக்கொண்டிருந்தாள். திடீரென்று மின்சாரம் தொலைந்துபோயிருந்தது.

பிரேமா கட்டிலில் கிட்டத்தட்ட கிழிந்த பேப்பர் போல் கிடந்தாள். இமைகள் மூடியிருந்தன. முகத்தில் கறுப்பு இன்னும் கூடியிருந்தது. முழங்கை அருகில் க்ளூகோஸ் இறங்க ஊசி குத்தி ட்யூப் பொருத்தப்பட்டிருந்தது.

இரண்டு நாட்கள். நாற்பத்து எட்டு மணி நேரங்கள். ட்ரிப்ஸ்தான். ஆகாரங்கள் வயிற்றில் தங்காமல் முரண் கொண்டன. வைஷ்ணவி நிழல்

அசையப் பார்த்து நிமிர்ந்தாள். கண்களில் ஒளி கூடியது.

'டாக்டர், பட்டு டாக்டர்' என்று பெயர் வைக்கலாமா என்று வைஷ்ணவி யோசித்தாள். டாக்டரை அவளுக்குப் பிடித்திருந்தது. அம்மாவை நிறைய கவனிக்கிறார் என்பதில் அவளுக்கு டாக்டர் மீது அன்பு, கருணை எல்லாம் கடல் போல் பெருகியது.

''என்னம்மா, கரெண்ட் இல்லியா?'' என்று கேட்டார் நந்தகுமார். வைஷ்ணவியின் உச்சந்தலையை ஒற்றைக் கையால் பிடித்து லேசாக உலுக்கினார்.

''ஆமா டாக்டர்..''

பிரேமாவின் மணிக்கட்டைப் பிடித்து நாடி பார்த்தார்.

''அம்மா குணமாய்டுவாங்களா டாக்டர்?'' என்று கேட்டபடி டாக்டருக்கு விசிறத் தொடங்கினாள் வைஷ்ணவி.

பிரேமாவுக்கு அடிக்கடி நினைவு தவறிக்கொண்டிருந்தது. அவளுக்காக சொர்க்கத்தில் ஆயத்தங்கள் நடந்துகொண்டிருந்தன. பால் கறப்பவனைக் கண்டதும் கயிற்றில் திமிறிக்கொண்டு ஏக்கமாய்ப் பார்க்கிற கன்றுதான் நினைவுக்கு வந்தது, வைஷ்ணவியைப் பார்க்கையில்.

அந்தக் கேள்விகளுக்குப் பதில் சொல்லாமல் விசிறியைப் பிடித்தார் நந்தகுமார். ''அம்மாக்கு விசிறு'' என்றார். ''அப்பா எங்கே?''

''இந்து பசிக்குதுன்னு அழுதா. சூர்யாவையும் அவளையும் கூட்டிட்டு ஹோட்டலுக்குப் போயிருக்கார்.''

"உனக்குப் பசிக்கலே?''

''அம்மாவை யாரு பாத்துப்பாங்க? அப்பா பார்சல் வாங்கிட்டு வந்துடுவார். அம்மாவுக்கு என்ன ஆயிருக்கு டாக்டர்? ஏன் சாப்பாடே கொடுக்க மாட்டேங்கறீங்க?''

நந்தகுமார் உச்சியில் சுற்றாத விசிறியைப் பார்த்தார். நெற்றிப் பொட்டு கலைந்து வியர்த்துப்போயிருந்த வைஷ்ணவியைப் பார்த்தார்.

''வயித்தில வலி. சாப்பாடு ஜீரணமே ஆகலே. அதான் நேரடியா ட்யூப் மூலமா கொடுக்கறோம். நீ ஸ்கூலுக்குப் போகலியா இன்னிக்கு?''

''மூணு பேருமே லீவு போட்டுட்டோம்.''

''இந்து கூடவா ஸ்கூலுக்குப் போகுது?'' என்று ஆச்சரியமாய்க் கேட்டார் நந்தகுமார்.



''எங்க ஸ்கூல்லயே எல்.கே.ஜி.ல சேர்த்திருக்கோம். க்ளாஸ்ல போய்த் தூங்க வேண்டியது. ரைம்ஸ் சொல்லவேண்டியது. அவ்வளவுதான் அதுக்கு வேலை. அம்மாவுக்கு ஏன் டாக்டர் வயிறு குண்டா ஆய்டிச்சு? கை இளைச்சுப் போச்சு?''

''அதான் வயித்து வலின்னு சொன்னேனேம்மா..''

''இன்னும் எத்தனை நாள்ல சரியாகும் டாக்டர்?'' நந்தகுமார் யோசனை செய்யாமல் பதில் சொன்னார். ''மூணு நாள்ல..''

மூன்றாவது நாள் இரவு பதினொரு மணி.

வைஷ்ணவி அம்மாவுக்கு மாத்திரையெல்லாம் பொடித்துக் கரைத்துக் கொடுத்து விட்டு களைப்புடன் அம்மாவின் மார்பில் சாய்ந்திருந்தாள். தூங்கியிருந்தாள்.

கனவில் அம்மா தேவதை மாதிரி வெள்ளை ட்ரெஸ் போட்டுக்கொண்டு அந்தரத்தில் சிரித்துக்கொண்டே ஏறினாள். வைஷ்ணவி 'அம்மா' 'அம்மா' அலற அலற பிரேமாவின் சிரிப்பு அகன்றுகொண்டே போய்..

பிரேமாவின் மார்பு ஏறி இறங்குகிற வேலையை நிறுத்திக்கொண்டது. முக்கி முக்கி எண்ணெய் பூசிய கம்பத்தில் ஏறிய நினைவுகள், ஒரேயடியாய் வழுக்கிக் கொண்டு பாதாளம் போயின; எல்லாம் ஒய்ந்து போயின. வைஷ்ணவி தூங்கிக் கொண்டிருந்தாள்.

## 4

பிரேமாவின் காரியங்கள் வெகு சுருக்கில் முடிந்து போயின. ஒரே ஒரு அக்கா மட்டும்தான் உறவு என்று சொல்லிக்கொள்ள. அதுவும் அபுதாபியில் அவள் கணவனுடன் இருந்தாள்.

'சொல்லாமல் விட்டுவிட்டான்' என்று குறை வந்துவிடாமல் இருப்பதற்காக பாஸ்கரன் அவர்களுக்குத் தகவல் அனுப்பி இருந்தான்.

நிறைய புலம்பினான். அழுகை நிஜம்போல இருந்தது. நந்தகுமார் நைந்த மனதுடன் அவனைச் சமாதானம் செய்ய வார்த்தைகளைத் தேடித் திணறினார்.

''இத்தனை நாளா கவலையில்லாமல் வெளியூர், அது இதுன்னு சுத்திட்டிருந்தேன் டாக்டர். மூணும் சின்னப் பசங்க. எனக்கு என்ன செய்யறதுன்னே புரியலே?'' என்றான் பாஸ்கரன்.

''முக்கியமா கடைசிப் பொண்ணு இந்து. அவளை ஜாக்கிரதையாப் பாத்துக்கணும் பாஸ்கர். உங்களுக்கு அப்ஜெக்‌ஷன் இல்லேன்னா நான் முன்னேயே ஒருதடவை சொன்ன மாதிரி..''

''நோ டாக்டர், ஐ ஆம் வெரி ஸாரி. பெத்த அப்பன் உயிரோட இருக்கறச்சே ஒரு குழந்தையைப் பாத்துக்கத் துப்பில்லாம இன்னொருத்தர் கிட்ட.. ஐ ஆம் ஸாரி டு ஸே ஸோ.. விடறதுக்கு என் மனசு இடம் கொடுக்காது. நான் வேற வழி யோசிக்கிறேன்.''

பதினைந்து நாட்கள் கழித்து நந்தகுமாருக்கு அந்த 'வேற வழி' என்ன என்பதை படித்துக்கொண்டிருந்த செய்தித்தாள் சொன்னது.

'மனைவியை சமீபத்தில் இழந்தவருக்கு மணமகள் தேவை. மூன்று சிறு குழந்தைகளுக்குத் தந்தை. குழந்தைகள் பிறக்க வாய்ப்பில்லாத உடல் குறையுடன் இருக்கும் கல்யாணமாகாத பெண்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.'

வரி விளம்பரத்தின் ஓர் ஓரத்தில் அச்சாகி இருந்தது. அம்மாவின் மார்பில் புரண்டு புரண்டு அழுது மயக்கம் போட்ட வைஷ்ணவி எப்படி இந்த உறவை ஏற்றுக் கொள்ளும் என்று மனத்தில் கேள்வி முளைத்தது.

யோசித்துப் பார்த்ததில் பாஸ்கரன் செய்தது நியாயமே என்று தோன்றியது. அவனுடைய குழந்தைகளைப் பராமரிக்க ஒரு பெண் தேவைதான்.

செய்தித்தாளை மூடி வைத்துவிட்டு பாஸ்கரனை மறந்துபோனார்.

வந்திருந்த மூன்று விண்ணப்பங்களில் ஒன்றை மட்டும் தேர்வு செய்திருந்தான் பாஸ்கர்.

கட்டி வந்து ஆபரேஷன் செய்து கருப்பையை எடுத்துவிட்ட நந்தினி என்ற பெண்ணுக்கு மட்டும் பதில் போட்டான். அவளைப் பெற்றவர்கள் நேரிலேயே வந்தார்கள். திருச்சியில் பெரிய டிம்பர் கடை இருந்தது. அவளுக்குக் கூட ஒரே தம்பி ஸ்கூலுக்குப் போகிற வயதில். நந்தினி ஃபோட்டோவில் அழகாய் இருந்தாள். நேரில் இன்னும் அழகாய் இருந்தாள்.

கூந்தல் இருபுறமும் ரவிவர்மா பாணியில் பரந்து முகத்துக்கு ஓர் அழகான பின்னணி அமைத்தது. அகலமில்லாத நெற்றியில் சிவப்புப் பொட்டு. கண்களைச் சுற்றி மைவேலி. நுனிமூக்கு கத்திக் கூர்மை. கவர்ச்சியாக இருந்தது. சின்ன மேல் உதடும், தடிமனான கீழ் உதடும் ஈரம் கலந்து அவனை அழைத்தன. சரிந்து அகன்ற தோள்கள். குறுகிப்





போயிருந்த இடை. செழிப்பான பிருஷ்டங்கள்.

'அன்றைக்கே கல்யாணம்' என்றால் சரி என்று சொல்லத் தயாராய் இருந்தான். ''சிம்பிளாய் இருக்கட்டும் கல்யாணம்'' என்றான். அவன் பக்கத்திலிருந்து அவனுடைய மூன்று படைப்புகளும் தூரத்து மாமா உறவும் அவர்கள் பக்கத்தில் இன்னும் அதிகம். வீட்டோடு மாலை மாற்றி, காரில் வரவழைத்த ரிஜிஸ்ட்ரார் முன்னிலையில் தாலி கட்டித் திருமணம் ரிஜிஸ்தர் ஆனது. விடிகாலையில் கல்யாணத்தை முடித்துக் கொண்டு உடன் சென்னைக்குப் புறப்பட்டார்கள்.

வைஷ்ணவி சுவரில் சாய்ந்து உட்கார்ந்திருந்தாள். மேலே ஃபேன் 'விழுந்து விடுவேன்' 'விழுந்துவிடுவேன்' என்று சுற்றிக்கொண்டிருந்தது. மடியில் இந்து குப்புறப் படுத்திருந்தது.

''எல்லாக் குழந்தைகளும் ஆளுக்கொரு கொழுக்கட்டை சாப்பிட்டாங்களா? ஒரு பையன் மட்டும் ரெண்டு எடுத்துக்கிட்டான். கடைசித் தம்பி வந்து பாத்திரத்துக்குள்ள கையை விட்டா, காலியா இருக்குமேன்னு ஒரு குட்டித் தவளையைப் பிடிச்சு அதில போட்டு மூடிட்டான்!'' என்று கதை சொல்லிக்கொண்டிருந்தாள்.

கவனம் சொல்கிற கதையில் இல்லை. எதிரே, அறைந்து சாத்தப்பட்ட கதவையே வெறித்துக்கொண்டிருந்தாள்.

அப்பாவின் படுக்கை அறை திறந்திருந்தபோது உள்ளே நிறைய ஊதுவத்திகள் எரிந்துகொண்டிருந்தன. கட்டிலில் புது மெத்தைகள் போட்டிருந்தன. இன்றைக்கு கல்யாணம் செய்துகொண்ட 'அம்மா' தலை நிறைய மல்லிகையும், கனகாம்பரமுமாய் உள்ளே போய் தாழ்ப்பாள் போட்டுக்கொண்டாள்.

நந்தினியை வைஷ்ணவிக்கு அம்மா ஸ்தானத்தில் வைத்துப் பார்க்கப் பிடிக்கவில்லை. இத்தனை நாள் சாதம் பிசைந்து கையில் போட்டு, அப்பா இல்லாத நாட்களில் கூடப் படுத்து, இறுகக் கட்டிக்கொண்டு கதை சொல்லும் அம்மாவுக்குப் பதிலாய் இவள் வந்திருக்கிறாள் என்று மட்டும் புரிந்தது.

பளபளப்பாய் அவள் கட்டியிருந்த சேலையும், அதிகமாய் தீற்றியிருந்த மையும் என்னவோ போலிருந்தன. அவள் கொண்டுவந்திருந்த தின்பண்டங்கள் பிடிக்கவில்லை. சூர்யா ஆசையோடு மைசூர்பாகை வாயில் போட்டுக் கொண்டபோது எரித்து விடுகிற மாதிரி அவனைப் பார்த்தாள்.

அம்மா இடத்தை யாருக்கும் கொடுக்கமாட்டாள் இந்த வைஷ்ணவி



''என் மகனை கஷ்டம்னா என்னன்னே தெரியாம வளர்த்துட்டேன் மருமகளே!''

''கவலைப்படாதீங்க மாமா.. அதை நான் தெரிய வச்சுடுறேன்!''

-ஆர். பஞ்சவர்ணம், போளூர்



என்று எண்ணிக்கொண்டாள்.

பாவம் சூர்யா! பயணக் களைப்பில் தூங்கிப்போயிருந்தான். இந்து மட்டும் இன்னும் தூங்காமல் மடியில் படுத்துக்கொண்டு கதை கேட்டது.

உள்ளேயிருந்து சிரிப்புச் சத்தம் கேட்டது. அப்பாவும், புதிதாய் வந்தவளும் மாறி மாறி சிரித்துக்கொண்டிருந்தார்கள். திடீரென்று சிரிப்பு நின்றுபோய் நிசப்தமானது.

''அம்மா அம்மா கொழக்கட்டைக்கு கண் உண்டோடி? அம்மா அம்மா கொழக்கட்டைக்குக் கால் உண்டோடி?'' என்று வைஷ்ணவி பாடிக்கொண்டிருந்தாள்.

திடீரென்று மடியில் இந்து விலுக் விலுக் என உதறிக்கொள்வது தெரிந்தது. திடுக்கிடலோடு பார்த்தாள்.

இந்து நேர்க்கோடாய் நிமிர்ந்திருந்தது. காலும் கையும் காற்றை உதைத்தன. கழுத்து வளைந்து முகம் எகிறியது. வாயோரம் நுரை பூத்தது.

''இந்தா.. இந்தும்மா'' என்று குழந்தையின் கன்னத்தில் பதற்றத்துடன் தட்டினாள் வைஷ்ணவி.

கீழே கிடத்திவிட்டு அவசரமாய் ஓடிப் போய் பானைத் தண்ணீரை டம்ளரில் கொண்டுவந்து முகத்தில் தெளித்தாள். உதைப்பு குறையாமல் இந்து தவித்தது. ஒரு ஸ்பூனை எடுத்து பற்களுக்கிடையில் வைத்தாள். 'ப்ரூ, ப்ரூ' என்று அமானுஷ்யமாய் மூச்சு வந்ததும் வைஷ்ணவி வெருவாய் பயந்துபோனாள்.

அப்பாவை எழுப்பினால் கோபிப்பாரோ என்று பயமாய் இருந்தது.

எழுப்பாமல் விட்டுவிட்டால் இந்துவும் அம்மா போன இடத்துக்கே போய்விடுமோ என்று உதைப்பாய் இருந்தது. யோசித்தாள். ஒரு தீர்மானத்துக்கு வந்து ஓடிப் போய்க் கதவை தடதடவென்று தட்டினாள்.

உள்ளே அரவமில்லை.

ஒரு சின்ன இடைவெளி விட்டு மறுபடியும் தட்டுவதற்காகக் கையைத் தூக்கியபோது கதவு தடாலென்று திறந்தது.

அவசர லுங்கியோடு பாஸ்கரன் வெகு சூடாய் நின்றான்.

‘‘என்னடி?’’ என்று ஒற்றை நெருப்புச் சொல்லைக் கக்கினான்.

கோப பாஸ்கரனை எத்தனையோ தடவை பார்த்திருந்தாலும் இந்தக் கோபம் அவளை பயப்பட வைத்தது.

‘‘இந்து பாப்பாவுக்கு வலிப்பு வந்திடிச்சிப்பா..’’

‘‘வந்தா என்ன? என்ன செய்யணும்னு ஒனக்குத் தெரியாது? ராத்திரி நேரத்தில கதவைத் தட்டி என்னை எழுப்புனாத்தான் ஆச்சா?’’

அந்தக் கணம் வைஷ்ணவியால் இனி வரும் நாளில் என்றைக்கும் மறக்க முடியாத கணம். குழந்தைக்கு வலிப்பு என்றதும் அது பற்றிய பதைப்பு இல்லாமல் தூக்கம் கலைந்துபோனதே என்ற ஆத்திரத்தைக் காட்டவும் ஒரு அப்பாவால் முடியும் என்று புரிந்துபோன அதிர்ச்சி ஸ்திரமாய்ப் பதிந்த கணம்.

வெறித்துப் பார்த்த அவளை பாஸ்கரன் இடது கையால் பிடித்துத் தள்ளிவிட்டு கீழே கிடந்த குழந்தையை நெருங்கினான். ‘விருட்’ என்று அதைப் பற்றித் தூக்கினான். ‘‘ஏய், ஏய்’’ என்று அதன் கன்னத்தில் பலமாய்த் தட்டினான்.

‘‘சும்மா மரம் மாதிரி நிக்காதே. அந்த கார்டினால் மாத்திரையை எடுத்துப் பொடி பண்ணு’’ என்று வைஷ்ணவியிடம் காரம் காட்டினான். வைஷ்ணவி பதில் பேசாமல் மாத்திரையையும், தேனையும் எடுத்து வந்து நீட்டினாள்.

‘‘புரிஞ்சிதா என்ன செய்யணும்னு?’’

பாஸ்கரனின் சிடுசிடுப்பு கொஞ்சம் குறைந்திருந்தது. ‘‘புரிஞ்சுதான்னு கேக்கறேன். பதில் சொல்லித் தொலையேன்’’ என்று நெருப்புப் பீய்ச்சும் குரலில் குரைத்தான்.

‘‘ம்ம்’’ என்றாள் வைஷ்ணவி. ‘‘இனிமே எழுப்ப மாட்டேம்பா. நானே





பாத்துக்கறேன்..''

பாஸ்கரன் சற்றுத் தயக்கமாய் அவளைப் பார்த்துவிட்டு தொய்ந்த நடையுடன் அறைக்குள் நுழைந்து கதவை அறையாமல் சாத்தினான்.

வைஷ்ணவி இந்துவை மடியில் குலுக்கிக்கொண்டு அதன் இடுப்பில் கையை வளைத்துப் போட்டுக்கொண்டாள். மூடிய அறைக்குள் இருந்து அடங்கின குரலில் பேச்சு தொடர்ந்தது.

நந்தினியின் கண்கள் நீரில் மிதந்தன.

''எங்கப்பா அப்பவே சொன்னாரு, சாந்தி முகூர்த்தத்தை திருச்சியிலேயே வெச்சுக்கலாம்னு. நீங்கதான் ஒரேயடியா பிடிவாதம் பிடிச்சி மெட்ராஸ் போகணும்னீங்க. இப்பப் பாருங்க ஃபர்ஸ்ட் நைட் எவ்வளவு லட்சணமா இருக்குன்னு. உங்களுக்கு என்ன? எனக்குத்தான் இது ஃபர்ஸ்ட் நைட்!''

பாஸ்கரன் ஆத்திரமாய் ஏதோ சொல்ல முனைந்து உடன் எண்ணத்தை மாற்றிக் கொண்டான்.

''சின்னதுக்கு அடிக்கடி வலிப்பு வந்துடுது நந்தினி. குழந்தைதானே.. பாவம்..''

''நிஜந்தான். குழந்தைகளைக் கவனிச்சுக்கறேன்னு நானும் சொல்லியிருக்கேன்தான். ஆனா வந்த மொதல் நாளே எப்படிங்க எல்லாத்தையும் மறந்துட்டு அதுங்ககூட அல்லாட முடியும்?''

''கரெக்ட்தான்..''

''ஒரு பத்து நாளாவது ஹனிமூன் மாதிரி எங்கயாவது வெளியூர் போய் வந்துடலாம். அப்புறம் நானே பொறுப்பாப் பாத்துக்கறேன். ப்ளீஸ்!''

அவள் அவன் பக்கமாய் ஒருக்களித்துக்கொண்டாள்.

''சரி, போய்ட்டு வரலாம்'' என்றான் கிறங்கிப்போன குரலில்.

''தம்பி, தங்கச்சியை ஜாக்கிரதையா பாத்துக்கோ வைஷ்ணவி! ம், ஜாக்கிரதையா இருங்க. பக்கத்து வீட்ல சொல்லிட்டுப் போறேன். இருந்தாலும் நீங்க கவனமா இருந்துக்கணும். ரெயில்வே ட்ராக் பக்கமெல்லாம் போகக் கூடாது. என்ன? நாலே நாள்ல வந்துடுவோம். என்ன?'' என்று பாஸ்கரன், வைஷ்ணவியின் தோளைப் பற்றிச் சொன்னான். தட்டிக் கொடுத்தான்.

வைஷ்ணவி கலையாத பார்வையுடன் இவனையும், வாசல்புறம் தயாராய் நிறுத்தியிருந்த பெட்டியையும், கண்ணாடிக்கெதிரில் நின்று



"எங்க ஆத்தா ஆடு வளர்த்தா, மாடு வளர்த்தா, கோழி வளர்த்தா.. ஆனா, நாய் மட்டும் வளர்க்கல. ஏன் தெரியுமா?"

"அதை அடிச்சித் தின்ன முடியாது.. அதான்!"

- ஆர். கிருஷ்ணமூர்த்தி,
வில்லிவாக்கம்



பின்னிக்கொண்டிருந்த நந்தினியின் முதுகையும் மாறி மாறிப் பார்த்தாள்.

''வசந்த விஹார்ல போய்ச் சாப்டுக்குங்க. அந்த ரூமைத் திறக்க வேணாம். பணம்லாம் இந்த ஹால் அலமாரியிலேயே வச்சுக்க. எப்பவும் வீட்டைப் பூட்டிட்டுப் போகணும். என்ன?''

''ம்ம்..''

''நந்தினி! ட்ரெய்னுக்கு டயமாச்சு. எத்தனை நேரம் பின்னிப்பே?''

''இதோ ஆச்சு'' என்று ரப்பர் வளையத்தைச் செருகிக்கொண்டு, ''நான் தயார்!'' என்றாள் நந்தினி.

வாசலில் ஆட்டோ காத்திருந்தது. ஏறிக்கொண்டார்கள்.

''அம்மாவுக்கும் அப்பாவுக்கும் டாட்டா சொல்லுங்க..''

வாசலில் மூன்று பேரும் வரிசையாய் நின்றுகொண்டு கையசைத்தார்கள்.

ஆட்டோ காணாமல் போனதும் பக்கத்து வீட்டுக் கதவு திறந்தது. பதினாறு வயது 'சீனு' முளைக்காத மீசையைத் தடவிக்கொண்டு இவர்களைப் பார்த்து இளித்தான்.

கதவை அறைந்து சாத்திக்கொண்டு உள்ளே வந்தாள் வைஷ்ணவி.

வசந்த விஹார் ஹோட்டல் வசந்த வெள்ளமாய் இருந்தது. நிறைய மனிதர்கள். அதைவிட நிறைய ஈக்கள். கேடய, வாள் மோதல் ஒலி மாதிரி உள்ளே பாத்திரங்கள் 'நண நண' என்றன.

வைஷ்ணவி வலது கையில் சூர்யா, இடது கையில் இந்து என்று பிடித்துக் கொண்டு உள்ளே நுழைந்தாள்.

''இந்தா பாப்பா'' என்று கல்லாவில் இருந்து குரல் வந்தது. நெற்றி நிறைய சந்தனமும் மார்புக்குக் கீழே தொப்பையுமாய் இருந்த அந்த மனிதர் குனிந்தார். தொப்பை இடித்துச் சிரமப்பட்டு அதை நிராகரித்தார்.

''என்ன வேணும்?'' என்றார். எல்லாச் சத்தங்களையும் மீறி, ''டிஃபன் சாப்பிடப் போறோம்'' என்றாள் வைஷ்ணவி, கொஞ்சம் பயந்துபோன குரலில்.

''காசு வச்சிருக்கியா?''

வைஷ்ணவிக்குக் கோபம் வந்தது. ''பின்னே ஓசில போடற ஓட்டலா நடத்தறீங்க நீங்க?''

பக்கத்து மேஜை ஆள் திரும்பினான். அவர்களைப் பார்த்தான். வைஷ்ணவிக்கு அவமானமாய் இருந்தது. இங்கே சாப்பிடக் கூடாது என்று நினைத்துக்கொண்டாள். ஆனால் சின்னது இரண்டும் ஏற்கெனவே பசி பசி என்று பறந்ததைப் பார்க்கக் கஷ்டமாயிருந்தது.

கல்லா மனிதர் வாயடைத்துப் போயிருந்தார். வைஷ்ணவி விடுவிடுவென்று உள்ளே நுழைந்து காஃபி பரிமாறி, சிறிது நேரத்தில் காலியாகப் போகிற மேஜை தேடி நின்றுகொண்டாள். மறுபடியும் இந்த ஹோட்டலுக்கு வரக்கூடாதென்று மனதில் சபதம் எடுத்தாள்.

## 5

**அ**ம்மா இருந்தபோது சில சமயங்களில் சின்னச் சின்னதாய் அவளுக்கு உதவி செய்திருக்கும் தெம்போடு வைஷ்ணவி சமையலறைக்குள் நுழைந்தாள்.

ஜன்னலைத் திறந்தாள். மாலை நேரத்துப் பொன் வெயில் காற்று. ரெயில் ஒன்று கடகடத்துக்கொண்டு சென்றது. அதன் சத்தம் பிரதேசக் காற்றை ஆக்ரமித்து ஜன்னல் வழியாகவும் நுழைந்தது.

பாவாடையைத் தூக்கி இடுப்பில் செருகிக்கொண்டாள். 'காஸை'த் திறக்கப் பயமாய் இருந்தது. இருந்தாலும் அக்கா மனதில் பயம் இருக்கிறது என்பதற்காக சூரியாவுக்கும் இந்துவுக்கும் பசிக்காமல் இருந்துவிடுமா? அல்லது தனக்குத்தான் பசிக்காமல் இருந்துவிடுமா?

காஸ் ஸ்டவ்வைப் பற்ற வைத்தாள்.

குக்கரை அடுப்பின் மேல் வைத்தாள். கொஞ்சல்போல் அதில்



தண்ணீர் விட்டாள். அரிசியைத் தேடியதில் பித்தளை ட்ரம்மில் முக்கால் இருந்தது. பாத்திரத்தில் தோராயமாக எடுத்துப் போட்டாள். அம்மா அரிசி கழுவுவதைப் பார்த்திருக்கிறாள். கழுவினாள்.

கழுவிய அரிசியில் மனதுக்குத் தோன்றியபடி நீரை விட்டு அந்தப் பாத்திரத்தைக் குக்கரில் வைத்து மூடினாள். எத்தனை நேரமாகும்? தெரியவில்லை.

ஹாலுக்கு வந்தாள். சூர்யா கணக்கு நோட்டை வைத்துக்கொண்டு அழலாமா என்னும் முகபாவத்தோடு குனிந்திருந்தான்.

''என்னடா சூர்யா?''

''இந்தக் கணக்கு வரமாட்டேங்குது.''

''எங்கே காட்டு?'' என்று அவன் பக்கத்தில் அமர்ந்தாள்.

குக்கர் விசில் அடித்து அவளை அழைத்தது. தீயைத் தணித்தாள். சற்று நேரம் சென்ற பின்பு ஸ்டவ்வை அணைத்தாள்.

வெளியே வந்து பார்த்தபோது சூர்யா அடுத்த கணக்கை வைத்துக்கொண்டு விழித்துக் கொண்டிருந்தான். இந்து குப்புறப்படுத்து தூங்கிக்கொண்டிருந்தது.

வைஷ்ணவிக்குக் கொஞ்சம் பயமாய் இருந்தது. வெளியே வெயில் விழுந்து இருள் எழுந்திருந்தது. சூரியனின் பார்வை இருக்கும் வரை இல்லாத ஒரு கூடுதல் பயம், சூழ்ந்த அரை இருட்டில் அதிகமானது.

இன்னும் இரண்டு ராத்திரிகள் இப்படியே ஓட்டவேண்டும் என்ற நினைப்பு கொஞ்சம் கொஞ்சம் கசந்தது. அப்புறம் அப்பாவும் புது 'அம்மா'வும் திரும்பி வந்து விடுவார்கள்.

'தட், தட்' என்று வெளியே கதவு தட்டும் ஓசை கேட்டது.

வைஷ்ணவிக்கு உடன் பயம் வந்தது. சூர்யா நோட்டுப் புத்தகத்திலிருந்து பார்வை எடுத்து, மூடிய கதவைச் சந்தேகமாகப் பார்த்தான். வைஷ்ணவி கதவை அண்டினாள்.

''யாரது?'' என்று குரல் கொடுத்தாள்.

தெளிவில்லாமல் ஏதோ பதில் வந்தது. கதவைத் திறக்கவும் பயமாய் இருந்தது. கொஞ்சமாய்த் திறந்து பார்த்தாள்.

ஒரு கையில் பாத்திரத்தோடு சீனு நின்றுகொண்டிருந்தான். இன்னொரு கை இல்லாத மீசையை இன்னும் வருடிக்கொண்டிருந்தது.

''என்ன?'' என்றாள் வைஷ்ணவி கதவை முழுவதும் திறக்காமலேயே.

''கதவைத் திறவேன்'' என்றான் மஞ்சள் பூத்த பற்களைக் காட்டி. ''அம்மா இதை குடுத்துட்டு வரச் சொன்னாங்க..''

வைஷ்ணவி கதவைத் திறந்தாள்.

''என்ன இது?''

பாத்திரத்தை வாங்கித் திறந்து பார்த்தாள். வாசனை மாறாத ரசம் இருந்தது. தக்காளி மிதந்தது. உடனே முகம் பூராவும் சிரிப்பு வந்தது.

''தாங்க்ஸ்ன்னு சொல்லு உங்கம்மாகிட்ட..''

''சாதத்துக்கு என்ன பண்ணுவே? அதுவும் வீட்லேர்ந்து எடுத்து வரட்டா?'' அவன் உள்ளே வந்தான்.

''வேணாம், நானே ஆக்கிட்டேன்.''

''நிஜம்மாவா?'' சட்டையை இழுத்து விட்டுக்கொண்டான்.

''பொய் சொல்றே..''

''நிஜம்மாத்தான்.''

''எங்கே, பார்க்கலாம்..''

சூர்யா கணக்கு நோட்டைத் தேடி மறுபடி செல்ல, வைஷ்ணவி பாத்திரத்தோடு அவனைச் சமையலறைக்குள் அழைத்துப் போனாள். கடக்கிற வழியில், ''இந்து தூங்கிடுச்சா?'' என்றான்.

''அதபாரு, மூடி வச்சிருக்கேன்..''

''எல்லாத்தையும் மூடி மூடி வச்சுடறே வைஷ்ணவி! நான் எப்படிப் பார்க்கறதாம்?'' என்று கண்ணடித்தான்.

வைஷ்ணவிக்குப் புரியவில்லை.

குனிந்து பாத்திரத்தைக் கீழே வைத்தாள். சீனு அவளின் பின்புறத்தைத் தட்டினான். திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.

''ஏன் இவ்வளவு டைட்டா சட்டை போடறே?'' என்று மறுபடியும் தொட்டான். அமிலத்தால் தொட்ட மாதிரி இருந்தது.

''தொடாதடா'' என்றாள். குரலின் உஷ்ணம் சூர்யாவை எழுப்பியது. ஓடி வந்தான்.

சீனு ஒரு பரிதாப முகத்துடன், ''அப்புறம் வந்து பாத்திரத்தை



வாங்கிக்கறேன்'' என்று கூறியபடியே வெளியே நடந்தான்.

''என்னக்கா, ஏன் அவனைக் கோவிச்சுக்கறே?'' என்றான் சூர்யா. வைஷ்ணவி, ''சாப்பிடலாமா?'' என்று கேட்டாள்.

''ஓ, எனக்குப் பசிக்குது!''

''இந்துவை எழுப்பிக் கூட்டிக்கிட்டு வா'' என்று சமையலறையில் நுழைந்தாள். சீனு கொடுத்த ரசத்தைச் சாக்கடையில் சரித்துவிடலாமா என்று ஆத்திரமாய் இருந்தது.

'ச்சே. அவங்கம்மாதான் ரசம் பண்ணினாங்க. அவன் இல்லியே' என்று சமாதானம் செய்துகொண்டாள்.

சாதப் பாத்திரத்தைத் திறந்து பார்த்தாள்.

'பாவம் சூர்யாவும் இந்துவும்' என்று நினைத்துக்கொண்டாள். தட்டுக்களை எடுத்து அலம்பி வைத்தாள்.

கொடைக்கானலின் குளிர் கம்பளிகளைக் கத்தி போட்டுக் கிழித்தது. கட்டிலில் மரவட்டைகள் மாதிரி பாஸ்கரனும் நந்தினியும் சுருண்டிருந்தார்கள்.

''அப்பா! எப்படி நடுக்குது?'' என்று நந்தினி அவனோடு ஒட்டிக்கொண்டாள்.

பாஸ்கர் அவள் மூக்கு, உதடு, கழுத்து என்று தேடிக்கொண்டிருந்தான்.

''சீசன்ல ஒரு தடவை வரணுங்க'' என்றாள் நந்தினி அவன் மோவாயில் பற்களைப் பதித்தபடி.

''நீ கூட இருந்தா எல்லா நாளுமே சீஸன்தான் நந்தினி'' என்றான் பாஸ்கர் கிறக்கமான குரலில்.

''ப்யூட்டிஃபுல் ஸ்ட்ரக்சர் உனக்கு'' என்று அவளின் முகத்தில் முகம் தேய்த்தான்.

''நாளைக்குக் காலையில் எப்ப எழுந்துக்கறதாம், இப்ப இப்படிக் கொட்டம் அடிச்சீங்கன்னா?''

''காலையில எழுந்துக்கணும்னு யார் சொன்னது நந்தினி?''

நான்காம் நாள் விடியற்காலையில் வாசலில் ஆட்டோ படபடத்தது. பாஸ்கரனும் நந்தினியும் கூடை நிறைய பழங்களுடன், பெட்டியுடன் இறங்கினார்கள்.

வைஷ்ணவிக்குச் சந்தோஷமாய் இருந்தது. 'நேரத்தோடு ஸ்கூலுக்குப் போகலாம். லேட்டாய்ப் போனதற்காக நாற்பது பேர் முன்னால் பெஞ்ச் மீது ஏறி நிற்க வேண்டாம். வம்பு செய்கிற சீனு இனிமேல் தைரியமாய் வாலாட்டமாட்டான்.'

''என்ன பசங்களா, எப்படி இருக்கீங்க?'' கேட்டுக்கொண்டே பாஸ்கரன் நடுநாற்காலியில் வந்து உட்கார்ந்தான். நந்தினி சின்னதாய்ச் சிரித்துவிட்டு படுக்கையறைக்குள் நுழைந்துகொண்டாள். மூன்றும் அவனைச் சுற்றி நின்றன.

''உங்களுக்காக நெறைய பழம்லாம் வாங்கிட்டு வந்திருக்கேன். ப்ளம்ஸ், பேரிக்கா, ஆப்பிள் எல்லாம்..''

''ஹை..'' என்றாள் இந்து இரண்டு கைகளையும் தட்டி.

''எங்கே சாப்ட்டீங்க? என்ன சாப்பிட்டீங்க? மூணு நாளும் எப்படிப் போச்சு சொல்லுங்க'' என்றான்.

''அக்காவே சமைக்குதுப்பா..'' என்றான் சூர்யா ஆச்சரிய விழிகளைக் காட்டி. காற்றில் அவன் முடி அலைந்தது.

''நிஜம்மாவா?''

''ஆமாம்பா. சாதம் மட்டும் ஆக்கிடுவேன். தயிரோ, இன்னொண்ணோ போட்டுக்கிட்டுச் சமாளிச்சிட்டோம்'' என்றாள் வைஷ்ணவி பெருமையாய்.

''பரவாயில்லையே.. இனிமே எனக்கு பயமில்லை. தைரியமா உங்களை விட்டுட்டுப் போகலாம்'' என்றான் பாஸ்கரன், வைஷ்ணவியின் தலையைப் பற்றி சிலுப்பி விட்டுக்கொண்டே. வைஷ்ணவி விலகித் தலையை இழுத்துக்கொண்டாள்.

''மறுபடி ஊருக்குப் போகணுமா அப்பா?''

''உடனே இல்லடா கண்ணு. அடுத்த வாரம் சித்தியோட அப்பாவுக்கு அறுவதாங் கல்யாணம் வருதில்ல.. அதுக்காகப் போகணும்..''

''நாங்களும் வரோம்ப்பா. ஆசையா இருக்கு'' என்றான் சூர்யா அப்பாவின் காலரைப் பிடித்து.

''நோ, நோ.. ஸ்கூல் போற பசங்க. அடிக்கடி லீவ் போடக் கூடாது'' என்று எழுந்துகொண்டான்.

படுக்கை அறைக்குள் போனான். அதைவிட வேகமாய்த் திரும்பி வந்தான்.



''வைஷ்ணவி..'' என்று கூப்பிட்டான், அதிகாரம் இல்லாத குரலில்.

''என்னப்பா?''

''உங்கம்மாவுக்கு முடியலையாம். ட்ரெய்ன்ல வந்தது ரொம்ப டயர்டா இருக்காம். வசந்த விஹார்ல போய் நமக்கெல்லாம் டிபன் வாங்கிட்டு வந்துடுவீங்களாம். என்ன?''

''சரிப்பா'' என்றாள் வைஷ்ணவி உலர்ந்துபோன குரலில்.

## 6

நந்தினி கட்டிலில் உட்கார்ந்திருந்தாள். எதிரில் இருந்த புது அலமாரியில் பொருத்தப்பட்ட உயரமான கண்ணாடி அவளைக் காப்பி அடித்தது. கைகளை உயரத் தூக்கி சோம்பல் முறித்து ரசித்தாள்.

''வைஷ்ணவி..'' என்று அழைத்தாள்.

பாத்ரூமில் துணிகளை வாளியில் முக்கிக்கொண்டிருந்த வைஷ்ணவி தோளால் கன்னத்து நீரைத் துடைத்துக் கொண்டாள்.

''என்ன?'' என்றாள் அங்கிருந்தே.

''இங்கே கொஞ்சம் வாயேன்.''

வைஷ்ணவி துணிகளைத் தொப்பென்று கீழே போட்டுவிட்டு தயக்கமான கால்களுடன் வெளியே வந்தாள்.

தூக்கிச் செருகிய பாவாடையில் ஈரக் கைகளைத் துடைத்துக்கொண்டாள்.

''என்ன?'' என்றாள் படுக்கையறை வாசலில் நின்று.

''என்னன்னு கேக்காத வைஷ்ணவி. என்னம்மான்னு கேளு'' என்றாள் நந்தினி இரக்கம் தேடும் குரலில்.

''சரி, சொல்லுங்க'' வைஷ்ணவிக்கு மூச்சிரைத்தது.

''இந்தப் புடவையை லாண்டரில கொடுத்து அயர்ன் பண்ணி வாங்கிட்டு வரணும். ஓடிப் போய்ட்டு வந்துடு கண்ணு..''

''நான் துணி தோய்ச்சிட்டிருக்கேனே.. எனக்கு அப்புறம் ஸ்கூலுக்கு லேட்டாயிடும்.''

''லேட்டாகாதும்மா..''

''ஆய்டும்!''

''அப்ப சூர்பாவைக் கூப்பிடு. அவனைப் போய்ட்டு வரச் சொல்லலாம். '' தேர்ந்தெடுத்த வாக்கியம். அது உடன் வேலை செய்தது.

''சரி, வைங்க. துணியெல்லாம் காயப் போட்டுட்டு நானே போறேன்'' என்றாள் வைஷ்ணவி.

மறுபடி பாத்ரூமில் நுழைகையில் வைஷ்ணவிக்கு அழுகை அழுகையாய் வந்தது. ஸ்கூலுக்கு லேட்டாய்த்தான் போக முடியும்.

விடியற்காலையில் எழுந்தால் சங்கிலி சங்கிலியாய், சங்கிலி சங்கிலியாய் வேலைகள். பாஸ்கர் அலுவலகம் புறப்பட்டுப் போனதும் கறிகாய் நறுக்கிக் கொடுத்து எல்லோருடைய துணிகளையும் துவைத்து. வெளியே கடைக்குப் போய் வந்து..

சாயங்காலமும் இதே கதைதான்!

பாஸ்கரனும் நந்தினியும் பளிச்சென்று உடுத்திக்கொண்டு வெளியே கிளம்பி விடுவார்கள்.

'துணியெல்லாம் மடிச்சி வெச்சிடும்மா வைஷ்ணவி.'

'என் ஷூவை பாலீஷ் போட்டு வச்சிடும்மா ராஜாத்தி.'

'இந்துவை ஜாக்கிரதையாப் பார்த்துக்கடா. போனோமா, வந்தோமான்னு வந்துடறோம். என்ன?'

அம்மா உயிரோடு இருந்தபோது கவலையில்லாமல் 'ஹோம் ஒர்க்' செய்ய முடிந்தது. இப்பொழுது தினம் டீச்சர் 'வைஷ்ணவிக் குரங்கு' என்கிறாள். கிள்ளுகிறாள்.

பத்து நிமிடங்கள் கழித்து நந்தினியின் கசங்கிய புடவையை கையில் இடுக்கிக் கொண்டு வாசலில் இறங்கினாள். பக்கத்து வீட்டுச் சீனு கையில் ஒரு நோட்டுடன் வாசலில் நின்றுகொண்டிருந்தான்.

''எங்கே போறே வைஷ்ணவி? லாண்டரிக்கா?'' என்றான். அவன் விரலொன்று மீசையின் வெறும் அஸ்திவாரத்தைத் தடவிக்கொண்டிருந்தது.

''எங்கிட்ட குடேன். நான் போய்ப் போட்டுட்டு வரேன்.''

''வேண்டாம்'' என்றாள் துணியை இறுக்கமாகப் பிடித்துக்கொண்டு.

''ஏன் வைஷ்ணவி, என்னை உனக்குப் பிடிக்கலையா?'' என்று கூடவே நடந்து வந்தான்.

பதில் சொல்லாமல் வைஷ்ணவி நடந்தாள்.

''ஒனக்கு நெறைய விஷயம் சொல்லித் தரேன் வைஷ்ணவி, நீ தனியா



"சேடிப் பெண்ணுக்குக் கூட மரியாதை செலுத்துகிறீர்களே.. ஏன் அமைச்சரே?"

"மன்னா! உங்களைப் பற்றி எனக்கு தெரியாதா? இன்றைய சேடி.. நாளைய ராணி!"

- சி.பி. செந்தில்குமார், சென்னிமலை



இருக்கறச்சே.''

என்ன சொல்கிறான் என்று புரியவில்லை. இருந்தாலும் அதில் அவள் விஷமத்தை உணர்ந்தாள். ''ச்சீ, போடா'' என்றாள்.

''உங்க அப்பாவும் சித்தியும் மறுபடி ஊருக்குப் போவாங்கல்ல, அப்ப வா, எல்லாம் சொல்லித் தரேன்'' என்று சொல்லிவிட்டு விலகினான்.

வைஷ்ணவிக்கு அழுகை வெடித்துக்கொண்டு வரும்போல இருந்தது. அடக்கிக் கொண்டு இஸ்திரி வண்டியை நெருங்கினாள். புடவையைக் கொடுத்தாள்.

அது இஸ்திரி ஆகிற வரையில் குருட்டு யோசனைகளுடன் சாலையை மேய்ந்தாள். சாலையை ஒட்டி மேடான இடத்தில் ரெயில் பாலம் இருந்தது.

பார்த்துக் கொண்டிருக்கும்போதே எதிரும் புதிருமாய் இரண்டு ரெயில்கள் கடந்து போயின. நிறைய மனிதர்கள் படியில் தொங்கிக்கொண்டு போனார்கள். 'பாங்' என்று அரக்கத்தனமாகக் கத்திக்கொண்டு ரெயில் கடந்தபோது அவளுக்கு உடலில் சிலிர்ப்பு ஓடியது.

இஸ்திரி ஆகிவிட்டதா என்று பார்ப்பதற்காகக் கண்களைத் திருப்பியபோது டாக்டர் நந்தகுமாரைப் பார்த்தாள் வைஷ்ணவி.

பிளாட்ஃபாரத்தை ஒட்டி காரை நிறுத்திவிட்டு அவர் கம்பீரமாக இறங்கினார். கையை வீசி வீசி நடந்து இரண்டு கடைகள் தள்ளி இருந்த காஸெட் கடைக்குள் நுழைந்தார்.

வைஷ்ணவி, ''தோ வந்திடறேன்'' என்று இஸ்திரிக்காரரிடம் சொல்லிவிட்டு அந்தக் கடையைத் தேடி நுழைந்தாள்.

''டாக்டர்'' என்றாள் நேயமான குரலில். கவுண்ட்டருக்கு அந்தப் பக்கம்

இருந்த கூலிங்கிளாஸ் இளைஞன் அவளை விநோதமாகப் பார்த்தான்.

நந்தகுமார் திரும்பினார். விளக்கேற்றிய மாதிரி முகத்தில் சந்தோஷம் டாலடித்தது.

''அட, நீ எங்க இப்படி?'' என்றார்.

''பக்கத்துக் கடைக்கு இஸ்திரி போட வந்தேன். கார்லேர்ந்து நீங்க இறங்கறதைப் பார்த்தேன்.''

''அப்பா எப்படி இருக்காரும்மா? இந்துக்குட்டி எப்படி இருக்கா?''

''இந்துக்குட்டி நல்லா இருக்கா டாக்டர்..''

''துணி வாங்கிட்டியா?''

''இஸ்திரி ஆயிட்டிருக்கு. இதோ வாங்கணும். புது அம்மாவோட புடவை'' என்று சொன்னாள். சிரிக்கப் பார்த்தாள்.

''வாங்கிட்டு வா. நான் வீட்ல கொண்டுபோய் விடறேன்.''

''வேணாம் டாக்டர்'' என்று சந்தேகமாய்ச் சொன்னாள். எவ்வளவு பெரிய கார்! இந்தப் பாவாடையுடன் உட்கார்ந்தால் கார் அழுக்காகிவிடுமே!

''பரவாயில்ல, வாங்கிட்டு வா.''

வீட்டு வாசலில் கார் நின்றதும், ''வாங்க டாக்டர், ஒரு கப் ஹார்லிக்ஸ் சாப்பிட்டுட்டுப் போகலாம். டாக்டர்கள் சிபாரிசு செய்வது'' என்றாள். விழிப் படலத்தில் நட்சத்திர ஒளியுடன் அவரைப் பார்த்தாள்.

நந்தகுமார் சிரித்தார். ''ஸ்மார்ட் கேர்ள்'' என்று கன்னத்தில் தட்டினார். ''இன்னொரு நாள் வரேன்'' என்றார். ''போரடிச்சா சூர்யாவையும், இந்துக்குட்டியையும் கூட்டிக்கிட்டு நர்ஸிங் ஹோமுக்கு வா. பின்னால்தான் நம்ப வீடு. பாட்டு கேக்கலாம், டி.வி. பார்க்கலாம். என்ன?''

''தாங்க்யூ டாக்டர்'' என்று இறங்கிக்கொண்டாள். கார் சத்தம் கேட்டு நந்தினி வாசலுக்கு வந்தபோது கார் தெருமுனை திரும்பியிருந்தது.

வைஷ்ணவியின் முகத்தில் அசாதாரணமான பிரகாசம் இருந்தது. ஒரு துள்ளலுடன் வீட்டுக்குள் நுழைந்தாள்.

## 7

இன்னும் நான்கு நாட்களில் அப்பாவும் புது அம்மாவும் மறுபடி திருச்சிக்கு கிளம்பிப் போவார்கள் என்று புரிந்துபோனதும் வைஷ்ணவியின் வயிற்றில் அமிலம் அதிகமாகச் சுரந்தது.

இரவுகள் நிறைய அமானுஷ்ய சத்தங்கள் கொண்டதாகத் தெரிந்தன.



சருகு மிதிபடும் ஓசை காட்டுப்புலி வருகைபோல் இருந்தது. ஹால் ஃபேன் கீழே விழுந்துவிடப் போகிறது; அதன் கீழ் இருக்கும் இந்துவோ, சூர்யாவோ, தானோ காயப்படப் போகிறோம் என்று நினைத்தாள்.

மறுபடி ஒருமுறை அப்பாவிடம் சொல்லலாமா? தனியாக விடவேண்டாம் என்று அழுது பார்க்கலாமா?

அப்பா கேட்கமாட்டார். இந்த வயதுக்கு மேல் அழுவதும் அவ்வளவு பாந்தமாய் இருக்காது.

சீனுவைப் பற்றி ஏதோ ஒரு நாளில் கண்டிப்பாகச் சொல்லவேண்டும். ''மார்ல என்ன பாப்பா? ஈயா?'' என்று மார்பு வலிபடும்படி தட்டிய அந்த லாண்டரிக் கடைக்காரனைப் பற்றிச் சொல்லவேண்டும். இருந்தாலும் தயக்கமாய் இருந்தது. அப்பா அவர்கள் மூவரும் இல்லாத வேறு ஏதோ உலகில் சஞ்சரித்தார். டீச்சரிடம் கிள்ளு வாங்குவது உட்பட எதையுமே சொல்லாமல் விட்டு விட்டுச் சமையலறையில் நிறைய நேரம் எடுத்துக்கொண்டாள்.

சமையல் வேலையைவிட பள்ளிக்கு நேரத்துக்குப் போவது கஷ்டமாய் இருந்தது. சூர்யாவையும் இந்துவையும் தயார்ப்படுத்தி, வீட்டின் ஒவ்வொரு கதவையும் பூட்டிக் கொண்டு புறப்படும்போது பள்ளியில் இரண்டாவது மணி அடித்து ஓய்ந்திருக்கும்.

மாலையில் வீடு திரும்பிப் பூட்டுக்களை ஒவ்வொன்றாய்த் திறந்து நுழைந்து, ஜன்னல்களைத் திறந்து காற்றோட விட்டு மாடியிலிருந்து காய்ந்த துணிகளைக் கொண்டுவந்து மடித்து வைத்துவிட்டு சமையலறையில் புகுந்தால் வெளியில் வரும்போது உடம்பிலிருந்து குற்றாலம் கொட்டும்.

படிப்பாவது இன்னொன்றாவது. இறந்த காலத்தில் அவள் நிறைய மார்க்குகள் வாங்கி, வகுப்பில் லீடராக இருந்தாள் என்பதை புகை படிந்த கண்ணாடி வழியாய்த் தெரிந்த மாயக் காட்சி என்று நினைத்தாள்.

மிகப்பெரிய மனுஷி மாதிரி 'எல்லாம் என் தலைவிதி' என்று நொந்து கொண்டாள்.

அப்படி நொந்துகொண்ட ஒரு ஞாயிறு காலை.

அப்பாவும் நந்தினியும் மைசூர் பிருந்தாவனத்தில் டூயட் பாடிக்கொண்டிருந்த நேரம்.

வைஷ்ணவி காஸ் குமிழைத் திருகினாள். நெருப்புப் பெட்டியைத் தேடி எடுத்தாள். சர்ரக் என்று குச்சியைக் கிழிக்கையில் தூரத்தில் ரெயிலின் ஒலி அதிர்வுகள் கேட்டன. ஹாரன் நெஞ்சைக் கிழித்தது.

ரெயிலுக்கு இந்த இடத்தில் வரும்போது மட்டும் கத்தவேண்டும்

என்று தோன்றுமா என்ன? குக்கரை அடுப்பு மேல் ஏற்றிவிட்டு வெளியே வந்தாள்.

இந்து சோப்புத் தண்ணீரைக் கரைத்து வைத்துக்கொண்டு காகிதத்தைச் சுருட்டி குமிழ்களை உருவாக்க முயன்று தோற்றுக்கொண்டிருந்தது.

'தட், தட்,' என்று வாசல் கதவு அழைத்தது.

''ஹை, அப்பா'' என்றது இந்துக்குட்டி. சோப்புத் தண்ணீர் பாட்டிலைக் கீழே வைத்துவிட்டு, காகிதச் சுருளை 'வேண்டாம்' என்று தீர்மானித்து அலட்சியமாய் விசிறிவிட்டு கதவருகே போனாள். தாழ்ப்பாளைத் தொடக் கொஞ்சம் எகிறினாள். திறந்தாள்.

கதவுக்கு அந்தப் பக்கம் வைஷ்ணவியை எதிர்பார்த்த சீனு கொஞ்சம் ஏமாந்த முகத்தோடு அவளைப் பார்த்தான்.

''அக்கா இல்லை?''

''ஓ, இருக்குதே'' என்று பதிலுடன் தலையை அசைத்தாள் இந்து. காது ஜிமிக்கி கன்னத்தில் பட்டு விலகியது.

சூர்யா தலை நிமிர்ந்து மறுபடியும் குனிந்துகொண்டான்.

''எங்கே?'' என்றான் சீனு. விரல் தன்னிச்சையாய் மேல் உதட்டின் மேல் விளிம்பை நீவிக்கொண்டிருந்தது.

''சமையல் ரூம்ல'' என்று அவனுக்காகக் கதவைத் திறந்துவிட்டாள். அதற்கு மேல் அவன் மேல் அக்கறை இல்லாமல் தூர எறிந்த காகிதச் சுருளைத் தேடிக்கொண்டு போனாள்.

சீனு கதவைப் பின்னங்காலால் மூடிவிட்டு உள்ளே போனான். சூர்யா அவன் கடப்பதை லட்சியம் செய்யாமல் பத்து டஜன் சாத்துக்குடிக்கான விலை கண்டுபிடிப்பில் ஆழ்ந்துபோயிருந்தான்.

''வைஷ்ணவி!''

வைஷ்ணவி திடுக்கிட்டுப் போய் நிமிர்ந்தாள்.

சீனு நின்றுகொண்டிருந்தான். அவன் கண்களில் அவளால் இனம் காண முடியாத உணர்ச்சி ஒன்று மிதந்தது.

''என்ன பண்றே?''

''தெரியலே? சமையல்'' என்றாள்.

''நான் வேணும்னா ஹெல்ப் பண்ணட்டுமா?''

''இப்போ எதுக்கு வந்தே?''

''அம்மா உங்க வீட்ல துவரம்பருப்பு வாங்கிட்டு வரச் சொன்னா.''



"மன்னா, உங்கள் மகன் உங்களுக்குத் தப்பாமல் பிறந்துள்ளான்!"

"எப்படிச் சொல்கிறீர்கள் அமைச்சரே?"

''போர் குறித்த கேள்விகள் அனைத்தையும் சாய்ஸில் விட்டு விட்டு வந்துள்ளான்!"

- வீ. விஷ்ணுகுமார்,
கிருஷ்ணகிரி-1



''அவ்வளவுதானே? இரு, தரேன். வாங்கிட்டுப் போ.''

துவரம்பருப்பு டப்பி ஷெல்ஃபின் மேல் தட்டில் இருந்தது. மூலையில் இருந்த ஸ்டூலைக் கொண்டு வந்தாள். சீனு அறை நடுவில் அவள் மேல் பதித்த கண்களை எடுக்காமல் நின்றிருந்தான்.

ஸ்டூலைக் கொண்டு வருகையில் விலகுகிற மாதிரி விலகி அவள் இடுப்பில் பட்டான். இடுப்பில் தீயால் வருடிய மாதிரி இருந்தது வைஷ்ணவிக்கு.

''எருமை மாடா நீ? தள்ளி நில்லேன்..'' என்று ஸ்டூல் காலால் அவன் காலைத் தட்டினாள் வைஷ்ணவி.

முட்டியில் பட்டது அடி. சீனு 'அம்மா' என்று மெல்ல முனகினான்.

வைஷ்ணவி ஸ்டூலைப் போட்டுவிட்டு மேலேறி டப்பியை எடுக்கும்போது ஸ்டூல் காலை சீனு பலமாக உதைக்க, வைஷ்ணவி டப்பியோடு நிலை தவறிக் கீழே விழுந்தாள்.

''என்னையாடி இடிக்கிற?" என்று கோபமாகக் கேட்டு, சரிந்த அவளைத் தாங்கினான்.

வைஷ்ணவியின் மார்பு, தோள், தொடை என்று சகலமும் அவன் மேல் பட, திறந்த டப்பாவிலிருந்து துவரம் பருப்பு சிதறியது. வைஷ்ணவி உடல் முழுக்க யாரோ நெருப்புக் கங்குகளை வீசிவிட்ட மாதிரி உணர்ந்து திமிறினாள்.

''விடுறா என்னை, விடுறான்னா..'' என்றாள்.

சீனு மிகப் புதிதாய் ஓர் அனுபவம் பெற்று, வெறி பெற்ற கண்களில் மேலும் ஆசை பொங்க அவளை நெருங்கினான். அவள் முதுகில் கை கொடுத்து அவளைத் தன்பால் இறுக்கி அவளுடைய உதட்டைத்

தேட ஆரம்பிக்க, வைஷ்ணவி தலையைக் குனிந்து அவன் உதட்டில் இடித்தாள்.

சரியான இடி! சீனுவுக்கு நிறைய வலித்திருக்கவேண்டும். பிடி தளர்ந்தது. ஒரு கையால் உதட்டைத் தொட்டுக்கொண்டான்.

"ஒன்னை என்ன பண்றேன் பாரு" என்றான். கோபத்தில் பற்களைக் கிட்டித்துக் கொண்டான். வைஷ்ணவிக்கு மிருகக் காட்சி சாலையில் பார்த்த குரங்கின் ஞாபகம் வந்தது.

"சூர்யா.." என்றாள். தொண்டை கிழிந்துவிடுகிற மாதிரியான அந்தக் கத்தலில், வீட்டின் மேல் இடி விழுந்துவிட்ட பிரமையுடன் சூர்யா எழுந்தான். சமையல் அறைக்குள் ஓடினான்.

இந்து சோப்பு பாட்டிலைக் கீழே 'சிலுங்' என்று போட்டுவிட்டு வாயில் வைத்த காகிதச் சுருளோடு சூர்யாவின் பின்னால் ஓடினாள்.

சீனு, சூர்யாவின் வருகையை உணராமல் மேலும் புது முயற்சிகளில் ஈடுபட்டிருக்க, சூர்யா அந்தக் காட்சியைக் கண்டு கண்கள் நிலைகுத்தி, கூண்டில் இல்லாத சிங்கத்தைப் பக்கத்தில் சந்தித்த மாதிரி உணர்ந்தான்.

"டேய் சீனு, விடுறா எங்கக்காவை" என்றான். சீனு விடுவதாய் இல்லை.

"டேய், வேணாண்டா. உங்கம்மாகிட்ட வந்து சொல்லிடுவேன். விடுறா எங்கக்காவை.."

சூர்யாவின் அந்த அச்சுறுத்தலுக்குப் பலம் இல்லாமல் போகவே பரபரவென்று கண்களைச் சுற்றினான். சாக்கடை குத்தும் கழி இருந்தது. பாய்ந்து போய் எடுத்தான். பளீர் என்று பரவலாய்த் தெரிந்த சீனுவின் முதுகில் பலங்கொண்ட மட்டும் வீசினான்.

சீனு வைஷ்ணவியைத் திடீரென்று விட்டான். அடிபட்ட முதுகைத் துள்ளித் துள்ளித் தடவிக் கொண்டான்.

சூர்யா அந்த அடியில் திருப்தி வராமல் துள்ளிக்கொண்டிருந்த காலில் இன்னொரு வீச்சு வீச, சீனு, "அம்மா" என்று அலறினான்.

"டேய் சூரி! சீனு அண்ணாவை அடிக்காதடா. அவனுக்கு வலிக்குண்டா" என்று திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டே இந்து அழ ஆரம்பித்தாள்.

சீனு சரணடைந்தவன் மாதிரி கைகளை மேலே தூக்கிக்கொண்டான். வைஷ்ணவியையும், சூர்யாவையும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டே அறை ஓரம் ஒதுங்கினான்.



வாசல் படியில் தடுமாறி விழப் பார்த்து, சமாளித்து நின்று, திரும்பி நாயால் துரத்தப்பட்ட கரும்பூனை மாதிரி வாசலைப் பார்த்து ஓடினான்.

சூர்யா பின்னாலேயே போய்க் கதவை அடைத்துவிட்டு வந்தான்.

வைஷ்ணவி விசித்துக்கொண்டிருந்தாள். அடிவயிறு உள்ளடங்கி உள்ளடங்கி மேலேறியது.

"என்ன செய்ஞ்சான்க்கா அவன்? கடிக்கப் பாத்தானா?" என்றான் சூர்யா.

"தெரியலேடா. ஏதோ கெட்ட வேலை செய்யப் பாத்தாண்டா" என்றாள் விம்மல்களுக்கிடையில்.

"பயப்படாத அக்கா. அதான் நான் இருக்கேனே? அவங்கம்மா கிட்டே போய் சொல்லிட்டு வரட்டுமா?" என்றான் அவள் முகத்தை ஆராய்ந்துகொண்டே.

இந்து சிதறியிருந்த துவரம் பருப்பைச் சேர்த்துக்கொண்டிருந்தது.

"வேணாம்டா. உட்டுடு. நம்ப சொன்னாக் கேக்க மாட்டாங்க. சின்னக் குழந்தைங்க என்னென்னமோ சொல்லுதுன்னு நெனைப்பாங்க."

"அம்மா இருந்திருந்தா இப்படியெல்லாம் நடந்திருக்குமாக்கா?"

"அம்மாதான் இல்லியேடா. அம்மாதான் இல்லியேடா.." என்று வைஷ்ணவி அதுவரை அடக்கி வைத்திருந்த துக்கம் யாவற்றையும் பீறிட வைத்தாள்.

"அழாதக்கா" என்றான் சூர்யா. "நீ அழுதா எனக்கும் அழுகை வருது. அழாதக்கா.." என்றான்.

துவரம் பருப்பைப் பொறுக்கிக்கொண்டிருந்த இந்து வேலையைத் தொடர்ந்து கொண்டே அழ ஆரம்பித்தது.

"அம்மா" என்றது.

"நான் ஒண்ணு சொன்னாக் கேப்பியாக்கா?" என்றான் சூர்யா திடீரென்று.

"ம்.." வைஷ்ணவி அவன் எது சொன்னாலும் கும்பிட்டுக்கொண்டே கேட்கத் தயாராய் இருந்தாள்.

"நம்ப மூணு பேரும் அம்மாகிட்ட போய்ட்டா என்ன?" என்றான்.

வைஷ்ணவி சட்டென்று அழுகையை நிறுத்திக்கொண்டாள். இந்து நிமிர்ந்து இரு முகங்களையும் மாறி மாறிப் பார்த்து, சூர்யா சொன்னதை நம்பலாமா வேண்டாமா என்று லேசாக யோசனை ஓடிய மாதிரி

இருந்தது.

''எப்படிடா போறது? அம்மாதான் செத்துப் போய்ட்டாங்களே?''

''நாம்பளும் செத்துப் போயிடறது'' என்றான் சூர்யா.

''செத்துப் போய்ட்டா அம்மாவைப் பார்க்கலாமா சூரிண்ணா?'' இந்து ஒவ்வொரு வார்த்தையாய்க் கேட்டாள், கண்களில் வியப்புடன்.

''ஆமா'' என்றான் சூர்யா.

''எப்படிடா செத்துப் போறது? பயம்மா இருக்கேடா'' என்றாள் வைஷ்ணவி. நிஜம்மாகவே இந்த உலகை விட்டுப் போனால் போதும்போல இருந்தது அவளுக்கு. மறு உலகில் அம்மாவைப் பார்க்க முடியும் என்ற நம்பிக்கை இருந்தது.

தூரத்தில் 'பாங்' என்று அலறிக்கொண்டு ரெயில் ஒன்று கடந்தது. தடால் தடால் என்று ரெயில் தண்டவாளத்திற்குக் கொடுத்த முத்தங்கள், இடிகள் மாதிரி துல்லியமாய்க் கேட்டது அவர்களுக்கு.

''ரெயில் முன்னாடி போய் நின்னுடலாம் வைஷ்ணவிக்கா. இடிக்கிற வரைக்கும்தான் பயமா இருக்கும். இடிச்சிட்டா ஒண்ணும் தெரியாது'' என்றான் சூர்யா.

''சரி'' என்றாள் வைஷ்ணவி. ''ஹை, நானும்!'' என்றாள் இந்து, அம்மாவைப் பார்க்கப் போகும் சந்தோஷத்தில்.

8

டாக்டர் நந்தகுமார் ந்யூட்ரலுக்கு வந்து இன்ஜினை அணைத்தார். கார் சத்தமில்லாமல் காஸெட் கடை வாசலுக்கு வழுக்கிக்கொண்டு சென்றது. ப்ரேக்கை அழுத்தினார். கார் நின்றது. சோம்பல் முறித்தார். இறங்கினார். சாலை சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருந்தது. மக்கள் அவரவர் வேலைகளில் வெகு மும்முரமாக ஈடுபட்டிருந்தார்கள்.

சாலையின் அந்தப் பக்கம் மேட்டின் மேல் ரெயில் பாலம் வெயிலில் வறுபட்டுக்கொண்டு ஓடியது. மிக தூரத்தில் ஸ்டேஷனின் பெயர்ப் பலகை தெரிந்தது.

டாக்டர் பார்வையைத் திருப்பிக்கொண்டு காஸெட் கடைக்குள் நுழைந்தார். நுழைந்தவுடன் வைஷ்ணவி ஞாபகம் வந்தது. 'ஞாயிறுதானே? வீட்டில்தான் இருக்கும்!' என்று எண்ணிக்கொண்டார். வந்து பார்க்கச் சொல்லியிருந்தும் வராத அவள் மேல் ஒரு பொய்க் கோபம் படர்ந்தது. இந்துவைப் பார்த்து எத்தனை நாட்கள் ஆகிவிட்டன?



''எதிரி நாட்டு மன்னன் ஓலை அனுப்பிருக்கிறான் மன்னா?''

''ஓலையில் என்ன எழுதியிருக்கிறது என்று எல்லோரும் கேட்குமாறு படியுங்கள் அமைச்சரே!''

''இல்லை மன்னா? இது இளவரசிக்கு அனுப்பிய 'லவ்' லட்டர்!''

- கீதா சுவாமினாதன், சென்னை-35



'வைஷ்ணவி வீட்டிற்குப் போகலாமா?' என்று லேசாய்ச் சபலம் எழுந்தது.

பாஸ்கரன் இருந்தால் மிக அந்நியமாகப் போய்விடும். அவன் புது மனைவி வேறு தன் வரவை எப்படி எடுத்துக்கொள்வாளோ என்று பயம் எழுந்தது.

கதவைத் திறந்து காரில் உட்காரப் போகிற சமயம் அவரை அறியாமல் ரெயில் பாலத்தில் கண் படர்ந்தது. சுருக்கென்று நெஞ்சில் ஊசி குத்திய மாதிரி உணர்ந்தார்.

''வைஷ்ணவிக்கா முன்னால!'' என்றான் சூர்யா. சரளைக் கற்களின் கூர்முனைகள் அவன் கால்களைப் பதம் பார்க்க, பாதங்களை மெல்ல மெல்ல வைத்து வைஷ்ணவியின் சட்டை நுனியைப் பின்னால் பிடித்துக்கொண்டான்.

''இந்து, நீதான் கார்டு. என் பின்னால வா. சட்டையைப் பிடிச்சுக்கோ'' என்றான்.

இந்து மௌனமாய் அவன் சட்டையைப் பிடித்துக்கொண்டது.

''வைஷ்ணவிக்கா, ரைட்! போகலாம். கூ கூ ஊ ஊ'' என்றான் சூர்யா.

மூவரும் பாலத்தின் நடுவுக்கு வந்து மெல்ல ஓட ஆரம்பித்தார்கள்.

சரக்கு ரெயில் நின்ற களைப்புத் தீர்ந்து, 'பாங்க்' என்று முழங்கியது. மெதுவாய் நகர ஆரம்பித்தது.

''ஸ்டேஷன்ல ரயில் கிளம்பிடிச்சிக்கா. இன்னும் கொஞ்ச நேரந்தான்'' என்றான் சூர்யா. ''வேகமாப் போக்கா.''

நந்தகுமார் சாலையின் இரு பக்கங்களையும் பார்த்து, எல்லாவற்றையும்

மறந்து கடந்தார். சைக்கிள் ஓட்டி ஒருவனை மயிரிழையில் தவிர்க்க, ''படிச்சவனாய்யா நீ?'' என்ற சைக்கிள் ஓட்டியின் வார்த்தைகள் காற்றில் விரயமாயின.

மூச்சிரைக்க சரிவில் ஏறிப் பாலத்தைத் தொடர்ந்தார்.

இல்லை, பிரமையில்லை. நிஜமாகவே வைஷ்ணவிதான், சூர்யாதான், இந்துதான்!

'என்ன விளையாட்டு இது? ரெயில் விடுகிறார்களா? தேர்ந்தெடுத்த இடத்தைப் பார்' என்று எண்ணிக்கொண்டார்.

சரக்கு ரெயில் ஓலத்தைக் கேட்டு தனது வேகத்தை அதிகரித்து சரளைக் கற்களில் ஷூ வழுக்கி, விழுந்து, எழுந்து இன்னும் வேகமாக ஓடினார்.

''வைஷ்ணவி, சூர்யா, இந்து! நில்லுங்க.. ஓடாதீங்க, நில்லுங்க..'' என்று பிரதேசம் முழுக்கக் கேட்கிற மாதிரி அலறினார்.

வைஷ்ணவிக்கு டாக்டரின் குரல் கேட்டது. சட்டென்று நின்று திரும்பிப் பார்த்தாள்.

"டேய் சூர்யா, டாக்டர் மாமாடா'' என்றாள் திகிலுடன்.

"டேய், டாக்டர் அங்கிள் எப்படியும் நம்பளைப் பிடிச்சிடுவார். அதனால இப்ப ஓட வேணாம்'' என்றாள்.

''அம்மாகிட்ட போவலியா?'' என்று கேட்டாள் இந்து, ஏமாற்றத்தை வெளிப்படையாய்க் காட்டி.

''நாம்ப அப்புறமாப் போலாம் இந்து. இப்ப டாக்டர்கிட்ட அம்மாவைப் பாக்கப் போய்க்கிட்டிருந்தோம்னு சொல்லாதே.''

''ஏன்க்கா?''

''அப்புறம் அவர் உன்னைப் போகவே வுடமாட்டார். சொல்லாத, என்ன? நாம்ப அப்புறமா போலாம்.''

''ப்ராமிஸா?'' என்றாள் இந்து.

''ப்ராமிஸ்!'' என்று அவள் உள்ளங்கையில் அடித்தாள் வைஷ்ணவி.

டாக்டர் மூச்சிரைக்க வந்து சேர்ந்தார். ஒன்றும் பேசாமல் மூவரையும் பாலத்திலிருந்து விலக்கி சரளைக்கற்களைத் தாண்டி கீழே இறக்கினார். வறண்ட நாக்கைக் காற்றில் நீட்டினார். வாயைத் திறந்து மூடினார்.

ஆசுவாசப்படுத்திக்கொண்டு, ''என்ன விளையாட்டும்மா இது?'' என்று வைஷ்ணவியைப் பார்த்துக் கேட்டார்.



''ரெயில் விளையாட்டு டாக்டர் அங்கிள்'' என்றாள் வைஷ்ணவி கள்ளமில்லாமல்.

''அதுக்கு இந்த இடம்தானா கெடைச்சது? கொஞ்ச நேரம் ஆயிருந்தா என்ன ஆகியிருக்கும்?''

மேலே அவர் பேசிய வார்த்தைகள் நெருங்கிக்கொண்டிருந்த ரெயிலின் ஒலியில் சரியாகக் கேட்கவில்லை. இன்ஜின் அவர்களைக் கடந்தது. டிரைவர் சின்னதாய் ஒரு 'பாங்க்' ஒலியைக் கொடுத்துவிட்டு இந்துவைப் பார்த்துக் கையை நீட்டி காற்றில் முத்தமிட்டான்.

டாக்டர் அவர்களை சாலைக்கு அழைத்து வந்து ஆளுக்கொரு கோன் ஐஸ்க்ரீம் வாங்கிக் கொடுத்தார்.

''எனக்கு பெப்ஸி கோலா'' என்று சிணுங்கிய இந்துவுக்கு அதையும் வாங்கிக் கொடுத்தார்.

''அப்பா வீட்ல இல்ல?'' என்றார்.

''அப்பா ஊருக்குப் போயிருக்கார் டாக்டர். நாங்கள்ளாம் அம்மாவைப் பார்க்க'' என்று சொல்ல ஆரம்பித்த இந்து, வாயை மூடிக்கொண்டது.

டாக்டர் இந்து பாதியாய்ச் சொன்ன வாக்கியத்தைக் கவனிக்காமல் கடைக்காரனுக்குப் பணத்தை எடுத்து நீட்டினார்.

''டாக்டர் அங்கிள் நல்ல அங்கிள் அக்கா. அவர்கிட்ட பொய் சொல்லக் கூடாது'' என்றாள் இந்து கிசுகிசுப்பாய்.

''அப்புறம் நீ அம்மாகிட்ட போகவே முடியாது'' என்று சூர்யா அகலக் கண்களுடன் பயமுறுத்த, "சரி" என்று சொல்லிவிட்டு உள்ளங்கையை வாயில் வைத்துக்கொண்டது இந்து.

''அப்பா இல்லே?'' என்று மறுபடியும் கேட்டுக்கொண்டு வந்தார் டாக்டர்.

''ம்'' என்று மழுப்பினாள் வைஷ்ணவி. இந்து சிரிப்பை மூடின வாயிலேயே அடக்கிக்கொண்டிருந்தாள்.

''சரி, எல்லாரும் வண்டியில ஏறுங்க. நான் ட்ராப் பண்ணிட்டுப் போறேன்.''

''வேண்டாம் அங்கிள். நாங்க இப்படியே நடந்து போறோம். வாக் பண்ணத்தானே வந்தோம்?''

டாக்டர் யோசித்தார். ''இல்ல, நீங்க ஏறுங்க. வீட்டுக்குக் கொஞ்ச தூரத்தில விட்டுத் திரும்பிடறேன். அப்பாவுக்கு நீங்க கார்ல ஏறினது தெரியாது. கவலைப்படாதீங்க'' என்றார்.

''ஹைய்யா'' என்று இந்து உற்சாகமாய் முன் சீட்டில் ஏறிக்கொண்டது.

அன்றைக்கு இரவு படுக்கப் போகிற நேரம் இந்துவை வலிப்பு அரக்கன் தாக்கினான்.

டாக்டர் போனதிலிருந்து இந்து மறுபடியும் அம்மாவைப் பார்க்க ஆசைப்பட்டு அழ ஆரம்பித்தது.

வைஷ்ணவி துணிச்சல் இல்லாமல் சூர்யாவையும் அடக்கிவிட்டு, இந்துவையும் அடக்கினாள்.

சூர்யா ஓரளவு புரிந்துகொண்டு அடங்கிப்போனான். இந்துதான் 'அம்மா' 'அம்மா' என்று அழுகையைத் தொடர்ந்தது. சாப்பாட்டை வெறுத்தது. நடுக்கூடத்தில் சுருண்டுகொண்டது.

வைஷ்ணவிக்குச் சாப்பிடப் பிடிக்காமல், சூர்யாவும் சாப்பிடாமல் அத்தனை சாதத்திலும் தண்ணீரைக் கொட்டி மூடி வைத்துவிட்டு வெளியே வருகிறபோது இந்து கை கால்களை உதைத்துக்கொள்ள ஆரம்பித்தாள்.

சூர்யா இந்துவுக்குப் பக்கத்திலேயே தூங்கிப்போயிருந்தான். அவளது ஒவ்வோர் உதைப்பும் அவன் இடுப்பில் பட்டுக்கொண்டிருந்தது. வாயோரம் நுரை தள்ளியிருந்தது.

வைஷ்ணவி வெகுவாய் பயந்து போனாள். வாசல் கதவைத் திறந்து பார்த்தாள். பக்கத்து வீட்டில் பூட்டு தொங்கிக்கொண்டிருந்தது. 'எங்கே போனார்கள் இந்த நேரத்தில்?' என்று நினைத்துக்கொண்டாள். தெருவெங்கும் இருள் அப்பி இருந்தது. கதவை மூடிவிட்டு உள்ளே வந்தாள்.

டாக்டரிடம் கூட்டிப் போகவேண்டுமா? முதலில் என்ன செய்யவேண்டும்? ஏற்கெனவே நேர்ந்த அனுபவங்களின்போது நிகழ்ந்தவை அத்தனையையும் யோசித்துப் பார்த்தாள்.

அவசரப் பதற்றத்துடன் ஸ்பூனை அதன் வாயில் பற்களுக்கிடையில் பாதுகாப்பாய்ச் செருகினாள். கார்டினால் மாத்திரையைப் பொடித்துத் தேனில் குழைத்தாள். எச்சில் நுரைக்கும் இந்துவின் வாய்க்குள் அதைத் தடவினாள்.

எச்சிலோடு சேர்ந்து வெளிவந்துவிடாமல் தொண்டைக்குள் இறங்குமா என்று பயமாயிருந்தது. ஸ்பூனை வாயில் செருகி, உடனே டாக்டரிடம் அழைத்துப் போய் ஊசி போடவேண்டும் என்று அம்மா ஒருமுறை சொன்னது நினைவுக்கு வந்தது. அதிர்ஷ்டவசமாய் வலிப்பு மாத்திரையிலேயே



''மன்னர் மகா கஞ்சம் என்று எதை வைத்துச் சொல்கிறாய்?''

''அவரைப் பற்றி அவரே புகழ்ந்து பாடி விட்டு, கஜானாவிலிருந்து பொற்காசுகளை எடுத்துக் கொள்கிறாரே!''

- ஆர். பஞ்சவர்ணம், போளூர்



அடங்கிப் போனது.

ஆனால் வைஷ்ணவியின் தூக்கம் முற்றும் கலைந்து போயிற்று. விளக்கை அணைக்க பயமாய் இருந்தது. கண் அயர்கிற நேரம் இந்துவுக்கு ஏதாவது ஆகிவிட்டால்? அந்த மாதிரி சமயங்களில் அம்மா என்ன செய்வாள்?

திடீரென்று நினைவுக்கு வந்து சமையலறையில் வரிசையாய் நின்ற சாமி படங்களுக்கு எதிரில் போய் நின்றாள்.

''முருகா, எங்க இந்துவைக் காப்பாத்து. அவளை ஒண்ணும் பண்ணிடாமக் காப்பாத்து'' என்றாள். வேண்டுகிறபோது குரல் களைத்துப்போய் அழுகையாய் மாறிப் போயிற்று.

மறுபடியும் இந்துவுக்கு அருகில் வந்து உட்கார்ந்துகொண்டாள். எங்கேயோ சுவர்க்கோழி 'க்ரீரீச்' என்று விடாமல் ரீங்காரம் போட்டது. பூனை ஒன்று இரைதேடி அலைந்து 'ம்யாவ்' என்றது வெகு ரகசியமாக.

வைஷ்ணவி பயந்து காதுகளைப் பொத்திக்கொண்டாள். மண்டைக்குள் வெறும் 'கும்' என்னும் ஒலி மட்டும் ரீங்காரமிட ஆரம்பித்தது. கண்களால் எந்த மூலை நிழலையும் பார்க்காமல் இந்துவையே பார்க்க ஆரம்பித்தாள். விடிகிற நேரத்தில் ஒரு தீர்மானத்துக்கு வந்திருந்தாள்.

9

**வை**ஷ்ணவி அடுத்த அலமாரியிலும் தேடினாள். கடிதங்கள் மருந்து பாட்டில்களுடன் கலந்தன. சின்னச் சின்னப் பொட்டலங்களில் இருந்த கோயில் விபூதி, குங்குமங்கள் பழுப்பாய்க் கலந்து நெடியடித்தன. துணிகளும், தினசரி பேப்பரும் ஒன்றோடு ஒன்று இழைந்தன.

ஊஹூம். அவள் தேடியது கிடைக்கவேயில்லை.

''என்னக்கா தேடறே?'' சூர்யா முதுகருகில் வந்து கேட்டான். திடுக்கிட்டுத் திரும்பினாள்.

''அம்மாவோட மருந்துச் சீட்டெல்லாம் எங்கேன்னு தெரியுமாடா?''

''எந்தம்மா? நம்பம்மாவா, புது அம்மாவா?''

''நம்பம்மாவோடது!''

''அப்பா ரூம்ல இருக்குமே!'' என்றான். ''அன்னிக்கு அதெல்லாம் புது அம்மா கிட்ட காமிச்சி அப்பா ஏதோ சொல்லிட்டிருந்தாரு.''

வைஷ்ணவி அறைக்குள் நுழைந்தாள். கட்டிலை ஒட்டியிருந்த சின்ன அலமாரியில் மேல் தட்டில் அவள் தேடியது கிடைத்தது.

அம்மாவின் பழைய ப்ரிஸ்கிருப்ஷன். இடது உச்சியில் டாக்டர் நந்தகுமார் என்று பெயர். கீழே அவருடைய முகவரி.

''எதுக்குக்கா இந்த பேப்பர் இப்போ?'' என்று சந்தேகம் மாறாமல் சூர்யா கேட்டான்.

வைஷ்ணவி பதில் சொல்லவில்லை.

டாக்டர் நந்தகுமார் மேஜைக்கு வந்திருந்த கடிதங்களை ஒவ்வொன்றாய்ப் புரட்டிக்கொண்டிருந்தார். அந்தத் தடியான கவரைப் பார்த்ததும் அதன் மேல் எழுதியிருந்த கையெழுத்தால் வசீகரிக்கப்பட்டுத் திறந்தார்.

கற்றையாய் நான்கைந்து நோட்டுத் தாள்கள். குண்டு குண்டான கையெழுத்தோடு. கண்களில் கேள்வியோடு முதல் வரியைப் படித்தார்.

'டாக்டர் அங்கிள், எங்களைக் காப்பாற்றுங்கள்!'

ஆர்வம் அதிகமாயிற்று. வேகமாக வரிகளில் பார்வை ஓடியது.

'எங்களுடைய கஷ்டங்களை உங்க கிட்டத்தான் சொல்லணும். எங்களுக்கு வேறு யாரும் கிடையாது. எங்கம்மாவுக்கு நீங்க வைத்தியம் பார்த்தும் அவங்க செத்துப் போனாங்க. அப்பா இன்னொரு அம்மாவைக் கூட்டி வந்தார். ஆனால் ரெண்டு பேருக்கும் எங்கள் மீது அக்கறை இல்லை. என்னைவிட சின்னத்தம்பி, இந்து, யார் மீதும் அப்பாவுக்கு அன்பு இல்லை. எப்பவும் புது அம்மாவோடதான் அவர் பேசறார். ஆபீஸ்லேர்ந்து வந்ததும் ரெண்டு பேரும் வெளியே போயிடறாங்க. நாங்க மூணு பேரும் தனியா இருக்க பயப்படறோம். என்னால படிக்கவே முடியலை. மார்க்கெல்லாம் கொறஞ்சி போய்டிச்சி. எப்பவும் ஏதாவது வேலை செஞ் சிக்கிட்டே இருக்கணும். சமையல் வேலை கூட என்னையே செய்யச் சொல்றாங்க. அடுப்பிலே பாவாடை நெருப்பு பிடிச்சிருமோன்னு பயந்து பயந்து சமையல் செய்யறேன்.



"போரைப் பார்த்து நடுங்கும் நம் மன்னரின் லேட்டஸ்ட் பட்டப் பெயர் என்ன தெரியுமா?"

"தெரியாதே!"

"முதலாம் 'கிலி'கேசி' "

- ஆர். பஞ்சவர்ணம்,
போளூர்



மளிகைக் கடையில இருக்கறவன், காய்கறிக்காரன், பால் டிப்போ மீசைக்காரன், எங்க வீட்டுப் பக்கத்தில இருக்கற சீனு எல்லாருமே என்னைத் தொட்டுத் தொட்டு கெட்ட வார்த்தையெல்லாம் பேசறாங்க. அப்பாவிடம் சொன்னால் அவருக்குக் கவனிக்க நேரம் இல்லை. புது அம்மா கிட்ட சொன்னா வெளியே போகாம இருக்கறதுக்கு, வேலை செய்யாம இருக்கறதுக்கு சாக்குச் சொல்றேன்னு சொல்லிடறாங்க. நான் எழுதறது உங்களுக்குப் புரியுதா?

இவங்க ரெண்டு பேருமா சேர்ந்து இந்துவைக் கவனிச்சிக்கவே மாட்டேங்கறாங்க. இந்துவுக்கு வலிப்பு பெரிசாகி அவ செத்துப்போய்டுவாளோன்னு பயமாயிருக்கு.

ராத்திரி நேரத்தில எனக்கு வீட்ல தனியா இருக்க ரொம்ப பயமா இருக்கு. துணைக்கு யாருமே இல்லை. அதான் நாங்க மூணு பேருமே சேர்ந்து அம்மாகிட்ட போய்டலாம்னு தண்டவாளத்திலே நடந்து போனோம். நீங்க வந்து எங்களைக் காப்பாத்திடுங்க..'

நந்தகுமாரால் மேலே படிக்க முடியவில்லை. கர்ச்சீஃபை எடுத்து முகத்தைத் துடைத்துக்கொண்டார். இருந்தாலும் வியர்வை நிற்காது பெருக ஆரம்பித்தது. டெலிஃபோன் அடிக்க ஆரம்பித்தது. உதாசீனப்படுத்தினார். தள்ளு கதவைத் திறந்து கொண்டு நர்ஸ் உள்ளே வந்தாள்.

''பேஷண்ட்ஸை அனுப்பலாமா டாக்டர்?'' என்று கேட்டாள்.

''நோ. யூ ஆல் கோ டு ஹெல். கெட் லாஸ்ட்'' என்று கத்தினார் டாக்டர் நந்தகுமார்.

நந்தகுமாரின் நடுங்கும் கரங்களையும், காகிதங்களையும் பார்த்துவிட்டு, கதவை மூடிக்கொண்டு உடன் விலகினாள். டாக்டர் கடிதத்தை மேலே படிக்க ஆரம்பிக்கு முன் கண்களைத் துடைத்துக்கொண்டார்.

'அம்மா சொன்னாங்க, நீங்க இந்துவை வளர்க்கிறேன்னு சொன்னதாக.

நீங்களும் நானும் அன்றைக்குக் காரில் போனோமே.. அப்போது எது வேண்டுமானாலும் என் வீட்டுக்கு வா என்று சொன்னீர்கள்.

எங்கள் மூன்று பேரையும் உங்களால் வளர்க்க முடியுமா? நான் ஷிநீலிஷீஷீறீக்குப் போய் படிப்பை முடித்து உங்களிடம் நர்ஸ் வேலை செய்கிறேன். இப்பொழுது கொஞ்சம் கொஞ்சமாக வீட்டு வேலை செய்வேன். பணம் வேண்டாம். உங்களுக்கு இஷ்டமிருந்தால் எங்களை தயவுசெய்து கூட்டிப் போவீர்களா? அப்பாவும், புது அம்மாவும் ஊருக்குப் போயிருக்கிறார்கள். எங்களைக் காப்பாற்றுவீர்களா? இந்துவையாவது காப்பாற்றுங்கள். அப்பாவிடம் தயவுசெய்து லிமீமீமீகூஷீஜக் காட்ட வேண்டாம். இப்படிக்கு அன்புள்ள வைஷ்ணவி.'

நந்தகுமாரின் முகத்து ரத்தம் எல்லாம் காணாமல் போயிருந்தது. சூழ்ந்திருந்த காற்று மண்டலம் அனலாய்க் கொதித்தது. நெஞ்சில் அரக்கர்கள் ஏறி மிதித்த மாதிரி வலித்தது. கண்கள் தன்னிச்சையாய் நீர்த்திரை போட்டிருந்தன. ''பாஸ்டர்ட்'' என்று கத்தினார். பாஸ்கரனுக்கு அது கேட்கவில்லை. என்ன செய்வேன்? என்ன செய்ய வேண்டும்?

அவனிடம் எடுத்துச் சொன்னால் புரிந்துகொள்ளமாட்டானே? 'என் குழந்தைகளை எனக்கு வளர்க்கத் தெரியும்' என்று மார் தட்டிக்கொண்ட ராஸ்கலை, ஸன் ஆஃப் எ பிட்ச்சை என்ன செய்வது?

'பேசாமல் இங்கே அழைத்து வந்துவிட்டால் என்ன?' எண்ணம் தோன்றிய மறுகணம் ரோடு ரோலருக்கு அடியில் அகப்பட்ட பல்லி மாதிரி அழிந்தது. எல்லாம் மைனர் குழந்தைகள். ஒரு வார்த்தை போலீஸில் போய் பாஸ்கரன் சொன்னால் தரதரவென்று இழுத்துப் போய்விடுவார்கள்.

''டாக்டர், இந்த எக்ஸ்ரே?'' என்று நுழைந்தாள் வேறொரு நர்ஸ்.

''கோ டு செரியன். டோன்ட் டிஸ்டர்ப் மீ.''

''இது நீங்களே பாக்க..''

''ஐ ஸே யூ கெட் அவுட்..''

சுவரெங்கும் ஒட்டியிருந்த, மாட்டியிருந்த குழந்தைகளை எல்லாம் ஒவ்வொன்றாய்ப் பார்த்தார்.

வைஷ்ணவியும் சூர்யாவும் இந்துவும் கிழிந்த துணிகளுடன், கையில் அலுமினியப் பாத்திரங்களுடன் தலைகள் கலைந்து, பஞ்சடைந்த கண்களுடன்..

அவசரமாய்த் தலையை உலுக்கி சிந்தனையைக் கலைத்தார்.

'ஸ்பெய்ன்லெஸ் பாஸ்டர்ட்!' என்று பற்களை நறநறவென்று கடித்தார். 'என்ன செய்யலாம்?' 'என்ன செய்யலாம்?' பார்வையை அலையவிட்டார்.





சட்டென்று பார்வை அந்த போஸ்டரில் நின்றது.

அன்னை மேரி, சிசு ஏசுவைக் கையிலேந்தியிருக்கும் போஸ்டர்.

மேரி மெமோரியல் ட்ரஸ்ட்!

அந்த ஃப்ரெஞ்ச் தாடி, தங்கப் பற்கள் நினைவில் புரண்டன.

அவசரமாய் டிராயரைத் திறந்தார்.

பேப்பர்களில் களைந்து அந்தக் காகிதத்தைக் கண்டுபிடித்தார்.

சென்னைத் தொடர்பிற்கு 'ரெவரண்ட் ஃபாதர் ஜான்ஸ்மித்' என்று போடப்பட்டிருந்தது. கீழேயே ஃபோன் நம்பர். எண்களை அழுத்தினார்.

''குட்மார்னிங், மேரி மெமோரியல்ஸ்!''

''மே ஐ ஸ்பீக் டு ஃபாதர் ஜான்ஸ்மித்?''

''ஜஸ்ட் எ மொமெண்ட்!''

படபடவென்று இதயம் அடித்துக்கொண்டது.

''ஃபாதர் ஜான் ஸ்மித் ஸ்பீக்கிங்!''

''குட்மார்னிங் ஃபாதர். நான் டாக்டர் நந்தகுமார்..''

''ஓ.. இட் இஸ் வெரி கைண்ட் ஆஃப் யு டு காண்டாக்ட் அஸ். ஏதாவது ஹெல்ப் வேணுமா?'' என்றார்.

''யெஸ் ஃபாதர்!'' என்றார் நந்தகுமார்.

''சொல்லுங்க'' என்றார் ஃபாதர்.

''நாகர்கோவில்ல உங்க கருணை இல்லம் ஒண்ணு இருக்கே.. அதுல மூணு பசங்களைச் சேர்க்கணும்.''

''அநாதைப் பசங்களா?''

''அம்மா, அப்பா இருக்கற அநாதைங்க. நான் நேர்ல வந்து எல்லாம் விளக்கமாச் சொல்றேன்.''

''ஒரு ஸ்மால் கண்டிஷன் டாக்டர்!''

''என்ன?''

''அவங்களை கிறிஸ்டியனா கன்வர்ட் பண்ணிடுவோம்.''

''மனுஷங்களா வளர்ந்தாப் போதும் ஃபாதர். ரிலிஜன் பத்தி எனக்குக் கவலையில்லே..''

''அவங்க பேரண்ட்ஸ் அப்ஜெக்ட் பண்ணமாட்டாங்களா?''

''அங்கதான் உங்க உதவி எனக்கு வேணும் ஃபாதர். நேர்ல



பேசறேனே!''

''ஓயெஸ். யூ ஆர் வெல்கம்!''

''அப்புறம் ஃபாதர்.. ஒரு சின்ன ஆப்ளிகேஷன். உங்க நாகர்கோவில் யூனிட்ல டாக்டர் யாராவது இருந்தா பரவாயில்லேன்னு முன்னே டொனேஷன் கலெக்ட் பண்ண வந்தப்ப சொன்னாங்க..''

''யெஸ்.. யெஸ்.. யெஸ்..''

''யாராவது டாக்டருங்க வந்திருக்காங்களா?''

''இட்ஸ் அவர் பேட் லக். யாரும் வரலே. நீங்க யாரையாவது சஜெஸ்ட் பண்றதுன்னா பண்ணுங்க. நாங்க நேர்ல அந்த டாக்டரைப் பாத்துப் பேசறோம். சரியான மெடிகல் ட்ரீட்மெண்ட் இல்லாம நாங்க அங்க அவதிப்படறோம். டாக்டர் வேணும்னா நாகர்கோவிலுக்கு வரவேண்டியிருக்கு. யூஸீ.. யூனிட் இருக்கிறது நாகர்கோவில் பக்கத்தில ஒரு கிராமத்தில. வீ வில் பீ வெரி க்ரேட்ஃபுல் டு யூ இஃப் யூ கான் சஜஸ்ட் ஸம்படிஸ் நேம்!''

''குறிச்சிக்கங்க ஃபாதர்!''

''சொல்லுங்க'' என்றார் ஃபாதர் ஜான்ஸ்மித்.

''டாக்டர் நந்தகுமார்!'' என்று சொல்லிவிட்டு டெலிஃபோனை வைத்தார் நந்தகுமார்.

நிறைய பிரச்சினைகள் வரும்.

இந்த கிளினிக்கை செரியன் பொறுப்பில் விட்டுப் போக வேண்டி இருக்கும். பாஸ்கரன் எதிர்த்து வந்து கேட்கையில் சமாளிக்கவேண்டும். ஏ.ஸி.யும் சொகுசுமாய் இருக்கும் இந்த சுகங்களைத் துறந்துவிட்டு அமைதியான இடத்தில் ஆடம்பரமில்லாமல் வாழவேண்டி இருக்கும்.

இன்னும் எத்தனையோ பிரச்சினைகள் எதிர் மோதும். பரவாயில்லை, ஒவ்வொன்றாய்ச் சமாளிக்கலாம்.

இப்பொழுது உடனடியாய் அந்தக் குழந்தைகளுக்கு ஆறுதல் சொல்லித் தயார்ப் படுத்தவேண்டும். எளிதாகிப்போன மனதோடு எழுந்தார்.

சுற்றி இருப்பவை எல்லாம் இனி தமக்குச் சொந்தமில்லை என்கிற ஒரு எண்ணம் எழுந்தது.

அந்தக் கடிதத்தை எடுத்து மார்புப் பாக்கெட்டில் பத்திரப்படுத்திக்கொண்டு வாசலைப் பார்த்து நடந்தார்.

(முற்றும்)